Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 09, 2024

புதன்கிழமை ஒக்டோபர் 09, 2024 | ஒளி: 10 கதிர்: 068 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## தீர்மானம் 51/1

'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பிலான தீர்மானம் 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் 6ஆம் திகதியன்று ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அமெரிக்கா, கிரேட் பிரித்தானியா, கனடா, வடக்கு அயர்லாந்து, வடக்கு மாசிடோனியா, ஜேர்மனி, மலாவி மற்றும் லக்சம்பேர்க் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இலங்கை தொடர்பான பிரதான குழுவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக 20 வாக்குகளும் எதிராக 07 வாக்குகளும் கிடைத்தன. வாக்களிக்காமல் விலகிய நாடுகளின் எண்ணிக்கை 20 ஆகும்.

முன்மொழியப்பட்ட தரநிலை 19 புள்ளிகளை உள்ளடக்கியது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ள இலங்கை, பொருளாதார நெருக்கடி மற்றும் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்தியுள்ளது.

வரைவுத் தீர்மானத்தின் புள்ளி 8இன் கீழ், உறுப்பு நாடுகள் இலங்கையில் சர்வதேச மனித உரிமை மீறல்கள் மற்றும் நீதித்துறை அல்லது தொடர்புடைய செயல்முறைகள் தொடர்பான விசாரணைகளை ஆதரிக்க வேண்டும்.

A/HRC/57/L.1 என பெயரிடப்பட்ட இந்த முன்மொழிவை இலங்கை அரசாங்கம் கடுமையாக நிராகரித்துள்ளது.

### எங்கள் அரசாங்கமும்

# '51/1க்கு எதிர்ப்பு"



புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கமும், மனித உரிமைகள் பேரவையின் 51/1 தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க முடிவு செய்துள்ளது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், திங்கட்கிழமை (07) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவா நகரில் 2024.09.09 தொடக்கம் 2024.10.11 ஆம் திகதி வரை இடம்பெறும்

அதற்கமைவாக, வெளிவிவகார அமைச்சர் கலாநிதி அரினி அமரசூரிய சமர்ப்பித்த விடயங்கள் அமைச்சரவையின் கவனத்திற்கு எடுக்கப்பட்டு, இலங்கை அரசின் நிலைப்பாட்டைக் கீழ்க்காணும் வகையில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது என்றார்..

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் சமகாலக் கூட்டத்தொடரில் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணை வரைபை இலங்கை நிராகரிப்பதாகவும், மனித உரிமைகள் பேரவையின் 51/1 தீர்மானத்திற்கு இலங்கை தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வருவதுடன், சாட்சிகளைத் திரட்டுகின்ற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கின்ற எந்தவொரு தீர்மானத்திற்கும் உடன்படாது இருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## "அது பொய்"

அரச பாடசாலைகளில் ஆரம்ப தர மாணவர்களுக்கான மதிய உணவு வழங்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தி பொய்யானது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கடந்த சில நாட்களாக பல்வேறு தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாகவும் அந்த தகவல் அனைத்தும் பொய்யானது எனவும் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் தொடரும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2


## கடந்த ஆட்சியின் 3 திட்டங்கள் நிறுத்தம்

கடந்த ஆட்சியினால் முன்னெடுக்கப்பட்ட மூன்று திட்டங்களை நிறுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சமர்ப்பித்துள்ள யோசனைக்கமையவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தின் கீழ் 'வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் விவகார செயலகம்', 'பங்கேற்பு ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கான மக்கள் சபை முறையை நிறுவுவதற்கான தேசிய மக்கள் சபை செயலகம்' மற்றும் 'விவசாய நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்' ஆகியவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

தொடர்ச்சி P2



## "மாயமான பக்கங்கள் குறித்து விசாரணை"

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பக்கங்கள் காணாமல் போனதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத், தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதியே நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்ற தேர்தல் நடைபெறுகின்றது. ஆகையால், பழைய குற்றங்களை எம்மீது சுமத்த முடியாது. நாங்கள், கோவைகளை மூடி மறைக்கமாட்டோம். விசாரணைகளில் இருந்த அதிகாரிகள், ஓய்வுபெறும்போது, கோவைகளை வீடுகளுக்கு எடுத்துச்செல்லமுடியாது என்றார்.

குற்றமிழைத்தவர்களுக்கு எமது அரசாங்கத்தில் தண்டனையைப் பெற்றுக்கொடுப்போம் என்று தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத், கோவைகளை நாங்கள் காணாமல் ஆக்கமாட்டோம். அத்துடன், மூடி மறைக்கவும் மாட்டோம் என்றார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி அனுரவுக்கு ஜோ பைடன் வாழ்த்து



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை நினைவு கூர்ந்துள்ள ஜோ பைடன், முழு அமெரிக்க மக்களின் சார்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதோடு, இலங்கையின் ஜனநாயகத்தை மேலும் பலப்படுத்துவதன் மூலம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியை அமைதியான முறையில் முன்னெடுத்தமைக்கும் தனது பாராட்டுக்களையும் கூறியுள்ளார்.

"இந்த தேர்தல் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் பலத்தையும்,ஜனநாயகத்தின் அடிப்படைகளான அமைதியான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலின் மூலம் தமது எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்வதற்கான இலங்கை மக்களின் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது" எனவும் ஜோ பைடன் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## சட்டத்தரணிக்கு எட்டு வருட கடூழிய சிறை

காணி உறுதிகளை தயாரித்து மோசடி செய்த குற்றச்சாட்டில் குற்றம் சுமத்தப்பட்ட சட்டத்தரணி ஒருவரை குற்றவாளியாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே, அவருக்கு செவ்வாய்க்கிழமை(08) அன்று 08 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஒரு குற்றச்சாட்டிற்காக 04 வருடங்கள் தண்டனை விதிக்கப்பட்டதுடன் இரண்டு குற்றச்சாட்டுகளுக்காக 08 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 20,000/- ரூபாய் தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட வழக்கறிஞர், இறந்த வழக்கறிஞரின் நொந்தாரிசு உரிமத்தைப் பயன்படுத்தி நிலத்திற்கான பத்திரங்களை மோசடி செய்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி தீர்ப்பளித்தார்,

தொடர்ச்சி P2

## "வளைந்தார் வாசு"

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, எதிர்வரும் பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

கொழும்பில், செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், தேசிய மக்கள் சக்திக்கு, எங்கள் கட்சி ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது. தேர்தலில் நாங்கள் போட்டியிடும் அதேவேளை அவர்களுக்கும் ஆதரவளிப்போம் என்றார்.





## "வாய்ப்பை பெண்களுக்கு வழங்கவும்"

எம்.எஸ்.எம்.நூர்தீன்

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை பெண்களுக்கு வழங்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கஃபே அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

பல ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு வரும் மூத்த அரசியல்வாதிகள் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவு செய்துள்ளனர். எனவே, ஒவ்வோர் அரசியல் கட்சிகளிலிருந்தும் வேட்பு மனுக்களைக் கையளிக்கும் போது பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குக் கணிசமான இடத்தை வழங்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கஃபே அமைப்பு கோரிக்கை விடுகின்றது.

இது தொடர்பாக கஃபே அமைப்பின் நிர்வாக பணிப்பாளர், சுரங்கி ஆரியவன்ச விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சீன கப்பல் வருகிறது

சீன இராணுவத்தின் பயிற்சி கப்பல் இலங்கைக்கு இம்மாத இறுதியில் வருகைதரவிருக்கின்றது. அதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், அனுமதியளித்துள்ளது.

இந்நிலையில், அரசாங்க தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் விஜித ஹேரத்,

**“ நாங்கள் எந்த நாடும் விசேடமானது என கருதவில்லை, பெரிய நாடாகயிருந்தாலும் சரி சிறிய நாடாகயிருந்தாலும் சரி அவற்றுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை பேணுகின்றது, எங்கள் அணுகுமுறையில் பக்கச்சார்பு இருக்காது என்றார்**

இந்தியாவுடன் எப்படி ஈடுபாட்டைப் பேணுகின்றோமோ அதுபோலவே, சீனாவுடன் ஈடுபாட்டைக் கொண்டுள்ளோம் என்று தெரிவித்த அவர், இலங்கை அனைத்து நாடுகளுடனும் சமமான இராஜதந்திர உறவைப் பேணும் எந்த நாட்டிற்கும் விசேட சலுகையையோ முக்கியத்துவத்தையோ வழங்காது என்றார்.

நாங்கள் எந்த நாடும் விசேடமானது என கருதவில்லை,பெரிய நாடாகவிருந்தாலும் சரி சிறிய நாடாகவிருந்தாலும் சரி அவற்றுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளைப் பேணுகின்றது,எங்கள் அணுகுமுறையில் பக்கச்சார்பு இருக்காது என்றார்.

# எங்கள் அரசாங்கமும் ‘51/1க்கு எதிர்ப்பு’



குறித்த தீர்மானத்தை நிராகரித்திருப்பினும், உள்நாட்டுச் செயன்முறை மூலம் நல்லிணக்கம் உள்ளிட்ட முக்கிய மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், இலங்கை அரசு உறுதி பூண்டுள்ளது என்றார்.

இலங்கையில் மனித உரிமைகள் பேரவை மற்றும் நிரந்தர மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் ஒத்துழைப்புடனும், மற்றும் ஆக்கப்பூர்வமான உரையாடல் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# “அது பொய்”



குறித்த வேலைத் திட்டத்தை அடுத்த வருடம் வரை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே செய்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் கடந்த மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

# ஜனாதிபதி அனுரவுக்கு ஜோ பைடன் வாழ்த்து

மேலும் அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் ஸ்திரத்தன்மை, சுபிட்சம் மற்றும் முன்னேற்றத்தை அடைவதற்கு அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஒத்துழைப்பை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சி, பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஜனநாயக ஆளுகை ஆகிய பல துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாகவும், இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் நிலையான, வளமான மற்றும் நியாயமான நாடொன்றைப் பற்றிய எதிர்பார்ப்பை அடைவதற்கும் அமெரிக்காவின் ஒத்துழைப்பு கிட்டும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க-இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிப்பதாகவும் பிராந்தியத்திற்கு நன்மை பயக்கும் மற்றும் ஜனநாயகக் கொள்கைகளைப் பாதுகாக்கும் முன்னெடுப்புகள் தொடர்பில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்படத் தயாராக இருப்பதை இந்த வாழ்த்துச் செய்தி எடுத்துக்காட்டுகிறது.

# கடந்த ஆட்சியின் 3 திட்டங்கள் நிறுத்தும்

அதற்காக ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்கள், ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்குறித்த அலுவலகங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் கருமங்களைத் தொடர்புடைய அமைச்சுக்கள் ஊடாக அமுல்படுத்தவதற்கான இயலுமை இருப்பதனால், அதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் / ஆலோசகர்களின் சேவை 2024-09-30 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# “மாயமான பக்கங்கள்...

விசாரணை அறிக்கையில், அந்த பக்கங்கள் எவ்வாறு காணாமல் போயின என்பதும், ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அனைத்து பக்கங்களும் அப்படியே உள்ளதா என்பதும் விசாரணைகளின் மூலம் கண்டறியப்படும் என்றார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஆணைக்குழுவின் அறிக்கைகளில் ஏதேனும் குறைபாடுகள் உள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும். அதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றாலோ அல்லது ஆணைக்குழு அறிக்கைகளில் குறைபாடுகள் இருப்பின், உரிய குழு அது தொடர்பில் ஆராயும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளியிடப்படாத அறிக்கைகள் தற்போதைய ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளதா என்பது இதுவரை தெரியவில்லை எனவும், உண்மைகளை ஆராய்ந்து அறிக்கை வெளியிடுவார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர்களுக்கு எதிராக கண்டிப்பாக சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி அனுர திஸாநாயக்க ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்துக்குள் அதற்கான அடிப்படை செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகவும் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# சட்டத்தரணிக்கு எட்டு வருட கடூழிய சிறை

நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி தீர்ப்பளித்தார்,

சட்டம் அறிந்தவர்கள் செய்யும் குற்றங்களால் சமூகம் பெரும் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், இவ்வாறான குற்றங்களைச் செய்யும் ஏனையோருக்கு பாடமாக, இந்த பிரதிவாதிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் லிஷான் ரத்னாயன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2013ஆம் ஆண்டு ஒக்டோபர் 11ஆம் திகதி அல்லது அதற்கு அடுத்தபடியாக இராஜகிரிய கொஸ்வத்த பிரதேசத்தில், உயிரிழந்த சட்டத்தரணி ஒருவரின் பெயரிலான போலி நொந்தாரிசு அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி காணிக்குப் பத்திரங்கள் மற்றும் பொய்யான ஆவணங்களை மோசடியாகத் தயாரித்த குற்றச்சாட்டின் கீழ் பிரதிவாதிக்கு எதிராகச் சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 2015ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையின் அடிப்படையில் பிரதிவாதி சட்டத்தரணிக்கு எதிராகச் சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்தார், நீண்ட காலமாக வழக்கை விசாரித்த நீதிபதி, பிரதிவாதி மீதான குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதாகத் தீர்மானித்து மேற்படி தீர்ப்பை அளித்தார்.

பிரதிவாதியின் சட்டப்பூர்வமா நடைமுறையை உச்ச நீதிமன்றம் 10 வருடங்களுக்கு 2011ஆம் ஆண்டு தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்த வேளையில், அவர் இந்த வழக்கை அடிப்படையாகக் கொண்ட காணிக்கான பத்திரங்களை மோசடியான முறையில் தயார் செய்துள்ளார் என அரசுத் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணி லிஷான் ரத்னயன தெரிவித்தார்.

சட்டம் தெரிந்தவர்கள் செய்யும் குற்றங்களினால் சமூகம் சீரழிந்து வருவதாகச் சுட்டிக்காட்டிய சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணி லிஷான் ரத்னாயன, இவ்வாறான குற்றங்களைச் செய்யும் ஏனைய நபர்களுக்குப் பாடமாக இந்த குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

முன்வைக்கப்பட்ட வாதங்களைக் கருத்திற்கொண்ட நீதிபதி குற்றவாளிக்குத் தண்டனை விதித்தார். அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. லிஷான் ரத்னாயன அரசாங்கத் தரப்பில் ஆஜரானார்.

# “வாய்ப்பை பெண்களுக்கு....

கடந்த காலங்களில் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சிலர், மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் தமது கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்பதை அவதானித்துள்ளோம். மேலும் மக்கள் அந்தந்த கட்சியால் வேட்புமனுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மக்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கின்றனர்.

எனவே, அனைத்து அரசியல் கட்சிகளும் தமது கட்சி பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் போது பொதுமக்களால் குற்றம் சுமத்தப்பட்டவர்களைத் தெரிவு செய்யாமல் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் கணிசமான வாய்ப்பை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டில் பெரும்பான்மையான வாக்காளர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் குறிப்பாக அவ்வீதம் நீண்டகாலமாக 50% முதல் 52% வரையில் காணப்படுகிறது.

ஆனால், இந்நாட்டு வரலாற்றில் பெண்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் 6% சதவீதத்தினை விட அதிகரிக்காமல் இருப்பது வருத்தமளிக்கிறது. இதன் காரணமாக ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென கஃபே அமைப்பு கேட்டுக்கொள்கின்றது.

## 2028இல் கடனை அடைக்க வேண்டுமானால்

# “அரசியல் ஸ்திரத்தன்மை வேண்டும்”

2028ஆம் ஆண்டிற்கான கடனை அடைப்பதற்கு எமது நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைய வேண்டும். அந்நிய நேரடி முதலீடுகள் வலுப்படுத்தப்பட வேண்டும். இங்கு நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையும் அரசியல் ஸ்திரத்தன்மையும் பாதுகாக்கப்பட வேண்டும். புதிய முதலீடுகளுக்கு இங்குக் காணப்படும் சம்பிரதாய சட்ட திட்டங்கள் மாற்றியமைக்கப் பட வேண்டும். இதனோடிணைந்த ஊழல் மோசடி மற்றும் திருட்டை ஒழிப்பதற்கான திட்டமும் முன்னெடுக்கப்பட வேண்டும். மனித மூலதன மேம்பாட்டுத் திட்டத்திற்குத் திறமையான பணியாளர்களை உருவாக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மொரட்டுவை தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடன், செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், எமது நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தை நாம் ஆரம்பிக்க வேண்டும். எமது நாட்டின் கடனில் ஒரு பகுதியைச் செலுத்தும் கால எல்லை 2028இல் ஆரம்பமாகிறது. பொருளாதாரம் சுருங்கி பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைந்து வரும் நிலையில் கடனை 4 வருடங்களில் ஒரே தடவையில் செலுத்த வேண்டியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கையின் விளைவே இது. எனவே, அன்னிய நேரடி முதலீடுகளை நாம் கவர வேண்டும். அதிக பலன்களை எதிர்பார்த்து வியட்நாம், கம்போடியா, இந்தோனேசியா, இந்தியா, வங்களாதேசம் போன்ற நாடுகளைத் தெரிவு செய்யாமல் எமது நாட்டை தெரிவு செய்வதற்கான அடிப்படை மாற்றங்களை இங்கு நாம் ஏற்படுத்த வேண்டும். முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக நாட்டிற்கு விசேட வேலைத்திட்டமொன்று தேவை. இந்த முதலீட்டு இலக்குகளுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்கச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தாமல் 2028 கடனை அடைக்கும் பணியைத் தொடங்க முடியாது. எனவே, இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த, நாட்டின் 220 இலட்சம் மக்கள் குறித்துச் சிந்தித்து, பொறாமை மற்றும் வெறுப்பு அரசியலில் இருந்து விலகி நல்லதை ஆதரித்து, கெட்டதை



எதிர்ப்பதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் செயல்பாட்டில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது என்று சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

# வட்டு. இந்துவின் வருடாந்த பரிசளிப்பு விழா

















■ புகஜிந்தன்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவு நாளும் கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் செவ்வாய்க்கிழமை (08) அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உயர் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராகத் திருகோணமலை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் நே.விஷ்ணுதாசன் கலந்து சிறப்பித்துள்ளனர்.

# பாரத்துக்கு பதிலாக பாலா



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின், கண்டி மாவட்டத்திற்கான புதிய அரசியல் மற்றும் தொழிற்சங்க அமைப்பாளராக பாலகிருஷ்ணன் பிரசாத்குமார், நியமிக்கப்பட்டுள்ளார்.

சௌமியபவனில் செவ்வாய்க்கிழமை(08) கூடிய கட்சி உயர் பீட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் இந்நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பாலகிருஷ்ணன் பிரசாத்குமார் இளந் தலைமுறையினை சார்ந்தவர் மாத்திரமன்றி, கடந்த காலங்களில் கண்டி மாவட்டத்திற்காக இ.தொ.கா. இளைஞர் அணியின் சிரேஷ்ட அமைப்பாளராகவும் தனது கடைமையினை சிறப்பாகச் செய்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பறந்த பாரத் மனோவுடன்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து சகல பதவிகளில் இருந்தும் இராஜினாமா செய்த பாரத் அருள்சாமி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியில் இணைந்துகொண்டார்.

அவர், அடுத்த பாராளுமன்றத் தேர்தலில், கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹம்பாந்தோட்டையில்

# எச்.ஐ.வி அதிகரிப்பு




ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இவ்வருடம் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் துரித அதிகரிப்பு குறித்து சுகாதார அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட பால்வினை நோய்த் தடுப்பு பிரிவின் வைத்திய அதிகாரி ஒருவர் அம்பலாங்கொடை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற மருத்துவச் சிகிச்சை முகாமின் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

மாவட்டத்தில் இவ்வருடம் 21 எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இன்னும் அடையாளம் காணப்பட வேண்டியவர்கள் இருக்கக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மொத்தமாக 87 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களில் பெரும்பாலானோர் சூரியவெவ மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், இன்னும் அடையாளம் காணப்பட வேண்டியவர்கள் இருக்கலாம் எனவும் அவர் கூறினார்.

எச்.ஐ.வி. ஒரு குணப்படுத்த இயலாத நோயல்ல என்றும் அது எய்ட்ஸ் நிலைக்கு வளரும் முன் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியும் என்றும் வைத்திய அதிகாரி மேலும் கூறினார்.



# உயிர்காத்த முகாமையாளர்



காசல்ரீ நீர்த்தேக்கத்தில் மூழ்கிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவனைக் குறித்த நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள சுற்றுலா விடுதியொன்றின் முகாமையாளர் காப்பாற்றிய சம்பவம் செவ்வாய்க்கிழமை(08) இடம்பெற்றுள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இருந்து அலறல் சத்தம் கேட்டுள்ளது. பின்னர் சென்று பார்த்தபோது, நீர்த்தேக்கத்தில் குறித்த இளைஞன் மூழ்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அவரை காப்பாற்றியதாக விடுதியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட இளைஞன் 18 வயதுடையவர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டுக்கு வீடு டெங்கு விழிப்புணர்வு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடியில் கடந்த சில தினங்களாக டெங்குகாய்ச்சல் அதிகரித்துள்ளதால் வீட்டுக்கு வீடு டெங்கு விழிப்புணர்வு மற்றும் டெங்கு குடம்பிகளை அழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல்.நசிர்தீன் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி பரீட் நகர் பகுதியில் டெங்கு விழிப்புணர்வு, டெங்கு குடம்பிகளை அழிக்கும் நடவடிக்கை என்பன



செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார அதிகாரிகள் 50 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்கள் வீடுவீடாக சென்று, டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அங்கு டெங்கு குழம்பிகள் அழிக்கப்பட்டதுடன், டெங்கு பரவும் வகையில் காணப்பட்ட வெற்று டயர்கள் சிரட்டைகள் என்பனவும் அழிக்கப்பட்டன. இதன்போது, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சரவணபவன் வருகை தந்து இதனைப் பார்வையிட்டார்.

# கட்டு மரம் கவிழ்ந்து கடற்றொழிலாளி பலி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் கட்டு மரம் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கடற்றொழிலாளி ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தும்பளை லூதர் மாத கோவிலடியை சேர்ந்த திருச்செல்வம் ஞானப்பிரகாசம் (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது கட்டுமரத்தில் கடற்றொழிலுக்காக கடலுக்குள் சென்ற வேளை கட்டுமரம் கடலில் கவிழ்ந்ததில் , அவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். அவரது சடலம் சக தொழிலாளிகளால் மீட்கப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# ஏர்பூட்டு விழா

■ ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை-தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் உள்ள கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் புளியூத்து குள விவசாய பகுதியில் ஏர்பூட்டு விழா நிகழ்வு செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்றது.

குறித்த பகுதி விவசாய சம்மேளனம் ஏற்பாடு செய்த நிகழ்வில் பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்து சிறப்பித்தார்.

பெரும்போக நெற்செய்கைக்கான வயல் விதைப்பு இடம் பெறவுள்ள நிலையில் இயந்திரம் மூலமான ஏர்பூட்டு நிகழ்வு இடம்பெற்றதுடன் இதில் தம்பலகாமம் பிரதேச கமநல சேவை திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய சம்மேளன உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# நால்வர் மீது மூன்று யானைகள் தாக்குதல்

யால தேசிய வனம், வெஹெரகல நீர்த்தேக்கத்தில் மீன்பிடிக்கச் சென்ற நால்வர் மீது மூன்று காட்டு யானைகள் தாக்குதல் நடத்திய சம்பவம் திங்கட்கிழமை (07) இரவு இடம்பெற்றுள்ளது.

கோனகங்கார , தியகிரித்த பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஆர்.டி.சந்துன் பிரதீப மற்றும் 25 வயதுடைய ஆர்.டி.ரங்க ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன் ஏனைய இருவரும் சிறு காயங்களுடன் தப்பித்துள்ளனர்.

இது தொடர்பில் தப்பித்துச் சென்றவர்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார், காயமடைந்த இருவரையும், நீர்த்தேக்கத்திற்கு அருகில் இருந்து மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் , இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோனகங்கார பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

புலமைப்பரிசில் பரீட்சை

# வினாத்தாளை கசியவிட்ட இருவருக்கு விளக்கமறியல்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் கசியவிடப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் மற்றும் பாடசாலை ஆசிரியரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதவான் நீதிமன்றம், திங்கட்கிழமை (07) உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும், திங்கட்கிழமை (07) நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் சமூக ஊடகங்களில் கசியவிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அசிங்கமான நிறத்தை நீக்கி தூய்மையான நாடாக்குவோம்

2024 பொதுத் தேர்தல், நவம்பர் 14ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் நிலையில், வேட்புமனுக்களை ஏற்றல், ஒக்டோபர் 11ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதற்கிடையே, சுயேச்சை குழுக்கள் பல கட்டுப்பணத்தை கட்டியுள்ளன. அரசியல்கட்சிகளில் பல கட்சிகள், இறுதி வரையிலும் காத்திருக்காமல், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக, எத்தனை கட்சிகள், எத்தனை சுயேச்சை குழுக்களில் இருந்து ஒவ்வொரு மாவட்டங்களிலும் எத்தனை பேர் போட்டியிடுகின்றனர் என்பது வெள்ளிக்கிழமை (11) தெரிந்துவிடும். அதற்குப் பின்னர், தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து 54 நாட்களுக்குள் பொதுத் தேர்தல் நடைபெறவிருப்பதால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் பெருமெடுப்பில், பிரசாரங்களில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை. எனினும், புதிதாகக் களமிறங்கும் கட்சிகளும், சுயேச்சை குழுக்களும் கட்டாயமாகப் பிரசாரம் செய்தேயாகவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை மிகவும் அமைதியாகவும் நியாயமாகவும் நடத்தியமை நாட்டுக்குக் கிடைத்த வெற்றி என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஜனாதிபதித் தேர்தல் காலத்திலோ அல்லது அதற்குப் பின்னரோ கொலைகளோ கலவரங்களோ இடம்பெறவில்லை என்பது மிகவும் பாராட்டுக்குரியது.

இலங்கையை நரமாமிசம் உண்பவர்களின் நாடாக சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியம் அறிமுகப்படுத்தியிருந்தது. ஆனால், கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அந்தச் சங்கப் பிரதிநிதிகள் அவதானித்த பின்னர், அது மிகவும் ஜனநாயக முறைப்படி நடைபெற்றதாக சர்வதேசச் சான்றிதழை வழங்கியுள்ளது.

'ஜனநாயகமான தேர்தல்', பொதுத் தேர்தலில் மட்டுமன்றி, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் வரையிலும் தொடர்ச்சியாகச் செல்ல வேண்டும். அதற்கான நல்ல ஆரம்பம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உருவாக்கப்பட்டது. அந்த ஆரம்பம் தொடர வேண்டும்.


முன்னாள் அரசியல்வாதிகள் பலர் போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கி விட்டனர். இன்னும் சிலர், தேசியப் பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்குச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ளனர். இதற்கிடையே புதுமுகங்கள் பல களமிறங்கப்பட்டுள்ளன.

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல், அடுத்த ஐந்து வருடங்களுக்குச் சட்டங்கள் இயற்றப்படும் பாராளுமன்றமாக இருக்கக் கூடாது. தற்போதைய ஜனாதிபதியின் கூற்றுப்படி, இது ஒரு புதிய மறுமலர்ச்சி சகாப்தத்திற்கு வழி வகுக்கும் அறிவொளி மற்றும் முன்மாதிரியான சபையாக இருக்க வேண்டும்.

நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றி எதிர்கால நல்ல நிகழ்வுகளை உருவாக்கும் அந்த பேரவையில் படித்த அறிவாளிகளை நியமிப்பது மக்களின் முழுமையான கடமையாகும். கடந்த பாராளுமன்றத்தில் நடந்த பல கசப்பான சம்பவங்களை நினைவில் கொண்டு, கடுமையாக வடிகட்டி, பாராளுமன்றத்துக்கு மிகச்சரியானவர்களை அனுப்பவேண்டிய பொறுப்பு வாக்காளர்களிடமே உள்ளது.

'ஜனநாயக தேர்தல்' பொதுத் தேர்தலில் உறுதிப்படுத்த வேண்டும். அதனூடாகவே, இலங்கை மீதான சர்வதேச அசிங்கமான நிறத்தை நீக்கி தூய்மையான நாடாக முன்னோக்கிச் செல்வதற்கான ஆரம்பத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.






எம்.எஸ்.எம்.ஐயூப்

# பொதுத் தேர்தலும் கட்சிகளின் நோக்கங்களும்

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெற்றது. பாராளுமன்றத் தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இவ்வளவு குறுகிய இடைவெளியில் நாட்டில் முக்கிய இரண்டு தேர்தல்கள் இம்முறை நடைபெறுகிறது.

இரண்டு தேர்தல்களுக்கும் இடையே 54 நாட்களே இருக்கின்றன. இதற்கு முன்னர் மிகவும் குறுகிய இடைவெளியோடு ஜனாதிபதித் தேர்தலொன்றும் பொதுத் தேர்தலொன்றும் 1988 - 89 ஆண்டுகளிலேயே நடைபெற்றுள்ளன.

அப்போது ஜனாதிபதித் தேர்தல் 1988ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி நடைபெற்றது. பொதுத் தேர்தல் 1989ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி நடைபெற்றது. இரண்டுக்கும் இடையே 64 நாட்களே இருந்தன.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் வித்தியாசமானதொரு தேர்தலாகும். ஏனெனில், வரலாற்றில் முதன்முறையாக உயர்குடி செல்வந்தர்களிடம் இருந்து சாதாரண மக்களால் நடத்தப்படும் ஒரு கட்சியிடம் ஆட்சி மாறியிருக்கிறது.

ஆட்சியைக் கைப்பற்றி இருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டணி பாரியதோர் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் தற்போதைய ஊழல் மலிந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவதாகவும் உறுதியளித்துள்ளது.

ஆனால், அக்கட்சிக்குப் பாராளுமன்றத்திலும் அதிகாரம் கிடைத்தால் மட்டுமே அதன் தலைவர்களால் அந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும். எனினும், அவ்வாறான மாற்றம் ஏற்படுமா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். பாராளுமன்றத்திலும் பாரிய மாற்றம் ஏற்படவேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஏனெனில், இலங்கையின் பாராளுமன்றம் எந்த அளவுக்கு மக்கள் நலனை முதன்மையாகக் கருதிச் செயற்பட்டுள்ளது. என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இந்த நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையை அடைவதற்கு இனப் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் தீராதிருப்பதற்கும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் பிரேரணைகளும் தேவையான சட்டங்கள் மற்றும் பிரேரணைகளை நிறைவேற்றப்படாமையுமே பிரதான காரணமாகும். தற்போதைய அரசியல் கள நிலைவரங்களில் ஏற்படும் மாற்றங்களைப் பார்க்கும்போது, பாராளுமன்றத்தில் ஏற்பட வேண்டிய இந்த மாற்றத்தைப் பற்றிய தேவை மென்மேலும் அதிகமாகவே தென்படுகிறது.

ஏனெனில், நாட்டில் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் வரலாறு காணாத பாரியதோர் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னரும் மாறி இருப்பதாகத் தெரியவில்லை. நாட்டை பொருளாதார பாதாளத்திலிருந்து மீட்டெடுப்பதோ அல்லது சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதோ இன்னமும் அவர்களது நோக்கமாகத் தெரியவில்லை. எவ்வகையிலேனும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவது மட்டுமே அவர்களது நோக்கமாகும்.

ஜனாதிபதித் தேர்தலின் போது கூட்டணியாக இயங்கிய கட்சிகள் அனைத்தும் பொதுத் தேர்தலிலும் அதே கூட்டணிகளாக? இயங்குமா? என்பதை எதிர்வரும் வெள்ளிக்கிழமை (11) பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் தெரிய வரும். ஆனால், சில அரசியல்வாதிகள் மாறி இருப்பதையும் காணமுடிகிறது. ஏனைய கட்சிகளின் அரசியல்வாதிகளை ஏற்றுக்கொள்வதில்லை என்பதைப் போல், செயற்படும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியோடும் இணைய மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் கீழ் பாராளுமன்றத்துக்குத் தெரிவான சில அரசியல்வாதிகள் முன்வந்துள்ளனர். ஆயினும், தேசிய மக்கள் சக்தி இன்னமும் அதைப் பற்றி தமது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கீழ், கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவான சில அரசியல்வாதிகள் கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்தனர். இப்போது அவர்களில் சிலர் வேறு வழிகளில் பயணிக்க முற்படுவதாகத் தெரிகிறது.

அவர்களில் சிலர் ஜனாதிபதித் தேர்தலின் போது, ரணிலை ஆதரித்தாலும் தேர்தலுக்கு முன்னரே மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் பிரதமருமாக இருந்த தினேஷ் குணவர்தனவின் தலைமையில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி என்றதொரு கூட்டணியை அமைத்தனர். தேர்தல் சின்னமாகக் கிண்ணத்தையும் தெரிவு செய்தனர். அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் பொதுத் தேர்தலில் கூட்டாகப் போட்டியிடுவதற்காகப் பொதுஜன முன்னணியோடு பேச்சுவார்த்தை நடத்தினர். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை காப்பாற்ற ரணிலை விட்டால் வேறு ஆளில்லை என்று கூறிய இவர்கள், பொருளாதார நெருக்கடியை உச்சக் கடத்துக்குக் கொண்டு வந்த பொதுஜன முன்னணியோடு பேச்சுவார்த்தை நடத்துவது விந்தையான விடயமாகும்.

பொதுஜன முன்னணியின் கீழ் போட்டியிட்டுத் தெரிவான சில ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினரும் ஜனாதிபதித் தேர்தலின் போது ரணிலை ஆதரித்தனர். அவர்கள் தொடர்ந்தும் ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடத் தயாராகின்றனர்.

அதேவேளை, இவ்வாறே ரணிலைப் போற்றிய சில சிறுபான்மையின கட்சிகளும் தனி வழியில் போகத் தயாராவதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலின் போது, சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்த இலங்கை தமிழரசுக் கட்சி பொதுத் தேர்தலின் போது, தமது வீடு சின்னத்தின் கீழ் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளது.

அக்கட்சி தனித்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாத நிலையில், பிரதான கட்சி ஒன்றை ஆதரிப்பதை விளங்கிக்கொள்ளலாம். ஆனால், அதற்குக் கொள்கை ரீதியிலான அடிப்படை இருக்க வேண்டும்.

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வை ஏற்றுக்கொள்ளும் கட்சிக்கே தமது கட்சி ஆதரவு வழங்கும் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தில் முதலில் கூறினர். ஆனால், பின்னர் அந்த விடயத்தில் எந்த விதமான உத்தரவாதத்தையும் வழங்காத ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்க முடிவு செய்தனர்.

குறைந்தபட்சம் தாம் பதவிக்கு வந்தால் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குவதாக கூறிய சஜித் பிரேமதாசவினால் அதனை அமுலாக்க முடியுமா என்பதையாவது அக்கட்சி சிந்தித்ததா? சஜித் யாழ்ப்பாணத்தில் இவ்வாறு கூறும் போது அச்சம் கொண்ட அவரது கட்சித் தலைவர்கள் கொழும்பிலிருந்து பல்வேறு விதமாக இக்கூற்றை விளக்கினர்.

அதன் அர்த்தம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது என்பதல்ல என்று எஸ்.எம்.மரிக்கார கூறினார். தற்போது செயலிழந்து இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தி மாகாண சபை முறையை மீண்டும் இயங்கச் செய்வதையே சஜித் பிரேமதாச குறிப்பிட்டார் என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

எவ்வாறாயினும், தனித்துப் போட்டியிட்டு தமது பலத்தைக் காட்டக்கூடிய பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்து போட்டிப் போடுவதையும் விளங்கிக்கொள்ளலாம்.

ஆனால், அதன் பின்னர் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தோல்வியடைந்தாலும் தமிழரசுக் கட்சி தொடர்ந்து அதனை ஆதரிக்க இருக்கிறதா? அல்லது அனுர குமார ஜனாதிபதியாக இருப்பதால் மற்றொரு கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்று நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போய்விடும் என்ற அடிப்படையில் நல்லாட்சி அரசாங்கத்துக்கு அளித்ததைப் போல் தேர்தலின் பின்னர் அனுரகுமாரவின் அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்கப் போகிறதா?

தெற்கே உள்ள பிரதான அரசியல் கட்சிகளுடன் எந்த அடிப்படையில் செயல்படுவது என்ற கொள்கை தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு இல்லை. அவ்வாறானதொரு கொள்கையை வகுப்பதும் இலகுவானதல்ல என்பதை எவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க மக்கள் விடுதலை முன்னணி சட்ட நடவடிக்கை எடுத்தது என்ற காரணத்தால், சிலர் அதற்கு ஆதரவு வழங்க மறுக்கின்றனர். ஆனால் புலிகளை முற்றாக அழித்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு அப் போர் முடிவடைந்த உடனேயே 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது அவர்கள் ஆதரவு வழங்கினர்.


2010, 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட சில தமிழ் கட்சிகள் ஐ.தே.க தலைமையிலான கூட்டணிகளுக்கு ஆதரவு வழங்கின. அந்த ஐ.தே.க. புலிகளுடன் போர் நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும் போதே அவ்வமைப்பிலிருந்து பிரிந்து செல்ல கருணா அம்மானுக்கு உதவியது. புலிகள் தோல்வி அடைய அது பிரதான காரணமாகியது.

அப்போது சஜித்தும் ஐ.தே.கவின் தலைவர்களில் ஒருவராகவே இருந்தார். அந்த சஜித்துக்கு தமிழரசுக் கட்சி 2019 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் உதவியது.

தெற்கை மையமாகக்கொண்ட எந்தவொரு பிரதான கட்சியும் வடக்கு, கிழக்கு இணைப்பையோ, சமஷ்டி என்ற சொல்லையோ ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. இந்த நிலையில், தமிழ் கட்சிகள் மாகாண இணைப்பையும் சமஷ்டியையும் ஏற்கும் கட்சியை ஆதரிப்போம் என்று கூறிவிட்டு எவரும் ஏற்காத நிலையில் ஏதாவது ஒரு கட்சிக்கு ஆதரவு வழங்குவதை விட இப்பிரதான கட்சிகளுடனான உறவு தொடர்பாகப் பொருத்தமானதொரு கொள்கையை வகுத்துக் கொள்வதே சிறந்ததாகும்.

முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை அவற்றின் தலைவர்களுக்குப் பட்டம், பதவிகள் கிடைத்தால் போதுமானதாகும்.

எனவேதான், முஸ்லிம்களுக்கு எதிராகக் கறுப்பு ஜூலையைப் போன்றதொரு நிலை உருவாகுமோ என்று அஞ்சும் அளவுக்கு 2019ஆம் ஆண்டு இனவாதத்தைத் தூண்டிய ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் குரலெழுப்பி முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குச் சென்ற முஸ்லிம் தலைவர்கள் சிலர் பின்னர் அதே ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தில் சேர்ந்தனர். ஆனால், அவர்களுக்கு அமைச்சர் பதவி கிடைக்கவில்லை.



## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும். மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### படிப்பதற்கு இடம் வேண்டும்

வவுனியா-வடக்கு மாறாஇலுப்பபை தமிழ் வித்தியாலயத்தில் போதிய கட்டிட வசதியின்மை மற்றும் பௌதிக வளப் பற்றாக்குறை என்பவற்றால் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருவதாகவும், போதிய வகுப்பறை வசதிகள் இன்மையால் சில வகுப்புகளை மர நிழல்களில் நிகழ்த்துவதுடன், ஆசிரியர் ஓய்வு அறையாகத் தற்காலிக கொட்டகை ஒன்றே காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதனை விட, குறித்த பாடசாலை விளையாட்டு முற்றம் காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. எனவே, குறித்த பாடசாலையின் வகுப்பறை வசதிகள் மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# கவியோடு கதை பேசல்



சந்திரகுமார் யதுஷினி,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



நாட்டாரிலக்கியத்தின் இதயமாக விளங்குகின்ற நாட்டார் பாடல் நாட்டுப்புறவியல் ஆய்வில் முக்கியம் பெறுகிறது. நாடோடிப் பாடல், கிராமியப் பாடல், பாமரப் பாடல், மக்கள் பாடல் என அழைக்கப்படுகின்ற, வாய்மொழியின் கதையாடல் முறையாக அமையும் இப்பாடல் மரபானது கிழக்கிலங்கை மக்களாலும் பாடப்பட்டு வந்துள்ளது.

குறிப்புப் புத்தகமும் தொலைபேசியும் நாட்டார் கலைவடிவங்களை நிகழ்த்துபவர்களுடைய கதைகளையோ, உரையாடல்களையோ, பாடல்களையோ கேட்டுப் பதிவு செய்வதற்கும் எழுதுவதற்கும் தயாராக இருந்தன. ஆனால் எந்த நாட்டார் கலையைத் தேர்ந்தெடுப்பது?, நமது ஊரில் என்ன நாட்டார் கலை இருக்கிறது? என்ற கேள்விகள் மட்டுமே மனதில் படிந்திருந்தன.

அன்றைய நாள் தேடலுடன் பயணமும் தொடங்கியது. சொந்த ஊரிலிருந்து 1 KM தூரத்திற்குக் கூத்துக் கலைஞரைச் சந்திக்கச் சென்றிருந்தோம். பயணத்திற்கு ஏமாற்றம் என்ற எண்ணம் மனதை நிலைகுலையச் செய்தது நண்புக்குத் தெரிந்த ஒருவர், கவிகளைச் சேகரித்து அதனைத் தொகுப்பது சிறப்பாக இருக்கும் என்று ஆலோசனை வழங்க, ஊருக்குத் திரும்பினோம்.

சுற்றி இருப்பவர் மீது கோபம் கண்களில் சில நேரம் நீரும் எட்டிப் பார்த்தது என் மனதில் ஏதேதோ எண்ணங்கள் உருவாக, நானும் நண்பியும் ஊர் முழக்கச் சுற்றித் திரிந்தோம். இறுதியாக, “என்ன புள்ள இந்தப் பக்கம்” என்ற கேள்வியோடு மாமி நின்றார்.

புரிந்ததும் புரியாததுமாக “கவி பாடுறவங்கள தெரியுமா மாமி” என்று தட்டுத் தடுமாறிக் கேட்டேன். அந்த வெயிலில் நிழலாக மாமி பின்தொடர்ந்து வர, கவி சேகரிப்பு தொடங்கியது.

நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், நாட்டார் இலக்கியம் (பாடல், கதை, நொடி எனப்படும் விடுகதை, பழமொழி, கதைப்பாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள், மந்திரங்கள்) என்பவற்றை ஆராய்ந்து ஆவணப்படுத்துவதாக நாட்டுப்புறவியல் அல்லது நாட்டாரியல் விளங்குகின்றது.

இந்தவகையில், கிராமங்களின் ஆற அமர்ந்த வாழ்க்கை முறையை, மக்களின் வாழ்வியல் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற இலக்கியப் பாரம்பரியத்தின் இதயமாக நாட்டுப்புறப் பாடல் காணப்படுகின்றது.

நாடோடிப் பாடல், கிராமியப் பாடல், பாமரப் பாடல், மக்கள் பாடல் என அழைக்கப்படுகின்ற, வாய்மொழியின் கதையாடல் முறையாக அமையும் இப்பாடல் மரபானது, கிழக்கிலங்கை முஸ்லிம் சமூகங்களிடையே ‘கவி’ என்னும் சொல்லினால் குறிக்கப்படுகின்றது. குறிப்பாக, தாலாட்டுப் பாடல், விளையாட்டுப் பாடல், சமயப் பாடல், குழந்தைப் பாடல் என அடுக்கு முறையாக அமைகின்ற கிராமியப் பாடல் வகைகளுள் வடிவம், ஓசை என்பவற்றினடிப்படையில் தனிமைப்படுத்தி அமையக் காணப்படும் பாடல் வகையாகக் கவி அமைந்திருக்கின்றது.

“இப்பாடல்கள் உயர் தொனியில் பாடப்படுவன. முதல் மூன்று அரை அடிகளும் உச்ச ஸ்தானியிலும் இறுதி அரையடி மேலிருந்து கீழ் நோக்கித் தாழ்ந்த தொனியிலும் பாடி முடிக்கப்படும்”. இதனால் தொலைவில் இருப்பவர்களும் இப்பாடல்களின் இசையைக் கேட்க முடியும்” என நுக்மான் (எம்.ஏ.1994:2), மற்றும் “கிழக்கிலங்கையில் கவிகளில் அதிக ஈடுபாடு உடையவர்களாக இஸ்லாமிய மக்கள் உள்ளனர்” என பேராசிரியர் சு. வித்தியானந்தன், வித்துவான் வி. சி. கந்தையா போன்றோரும் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

தொழில் செய்யும் நேரங்களில் களைப்பைப் போக்கி உற்சாகத்தை ஏற்படுத்துவதற்கும், ஓய்வு வேளையில் தமது பொழுதைக் கழிப்பதற்கும் விழாக்காலங்களில் நிகழ்ச்சிகளை மெருகூட்டுவதற்கும் என மக்களின் வாழ்க்கையில் அநேக நிகழ்வுகளில் பாடப்பட்டுள்ள இக்கவி மரபானது, வாய்மொழி ரீதியாக ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்குக் கைம்மாறி வந்துள்ளது.

இந்நிலையில்,“எமது கிராமத்தில் நாட்டார் ஊடகத்தை அடையாளங் காணுதல்” எனும் ஆய்வுக்காக அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேசத்திற்குட்பட்ட நற்பட்டிமுனை கிராமத்தில் இஸ்லாமிய மக்களிடையே கவிப் பாடல்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

சுற்றிவர அமைதி ஒருவரையொருவர் முகத்தைப் பார்த்தபடி அமர்ந்திருக்கின்றனர். நீ பாடு என்று வயதான பெண் கூற, கவிகளை மாறி மாறி பாடத்தொடங்கினர்.

இதன்போது கவி பற்றிப் பல விடயங்களை அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

‘வில்லுக் கரத்தையில’, ‘கத்தி எடுத்து கிளி கதிரு கொய்யும் வேளையிலே’, ‘மஞ்சனம் பூசிமகளார் வரம்பால போகக்குல’ என்று தொடங்குகின்ற கவிகளை ஒருவர் பாட, ‘கடிதத்தை எழுதி மச்சான்’, “பேனை புடுங்கி மகளார்’, ‘தேங்காய் துருவக்குல நான் தெருவால போகக்குல’, ‘கல்லோடு கல் அணையக் கதவோடு நிலையணைய’,‘நிலவும் பொழுதும் போராடும் வேளையிலே’, ‘ஈர மண்ணால இடிஞ்சுழுந்தன் சுவரால’, ‘காக்கொத்து அரிசி இப்ப காலு ரூபா விக்கையிலும்’ என்று தொடங்குகின்ற கவிகளை எல்லாம் தொடர்ந்து ஏனையோர் பாடினர்.

இவ்வாறு 50 ற்கும் மேற்பட்ட கவிகளைச் சேகரிக்க, வாய்ப்பு கிடைத்தது. இக்கவிகளில், அன்றைய கால வாழ்வியல், தொழில்கள், சமூக உணர்வுகள், காதலின் அழகு, உறவுகள், குடும்பக் கட்டமைப்பு மற்றும் சமய பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் வெளிப்பட்டு நிற்பதைக் கவிகளை முழுமையாகக் கேட்ட தருணங்களில் அறிந்து கொள்ளமுடிந்தது. குறிப்பாக,

விவசாயத்தை மையப்படுத்தியதாக வருகின்ற கவிகளில், விவசாயிகளின் உழைப்பு, வாழ்க்கைமுறை, அறுவடை செய்யும் போது, ஏற்படும் மகிழ்ச்சி, அவர்களின் உறவுகளைப் பற்றிய கவலைகள் ஆகியவை வெளிப்பட்டு நிற்கின்றன.

**“இக்கவிகளில், அன்றைய கால வாழ்வியல், தொழில்கள், சமூக உணர்வுகள், காதலின் அழகு, உறவுகள், குடும்பக் கட்டமைப்பு மற்றும் சமய பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் வெளிப்பட்டு நிற்பதைக் கவிகளை முழுமையாகக் கேட்ட தருணங்களில் அறிந்து கொள்ளமுடிந்தது**

**“கவிகளை இளைய தலைமுறையினர் கேட்டு மகிழ்வதற்கான உளப் பாங்குகளை வளர்த்துக்கொள்வதோடு, அவை மறைந்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது**

இக் கவிகள் தொடர்பில், முதன்முதலாக யாரால் பாடப்பட்டது என்பதனை கூற முடியாமல் இருப்பதாகவும், தலைமுறை தலைமுறையாக மனனம் செய்யப்பட்டே பாடப்படுவதாகவும், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, அக்கரைப்பற்று, நிந்தவூர், ஒலுவில் போன்ற பிரதேசங்களிலும் கவிகள் பிரபலமாக வழக்கில் இருப்பதையும் இதன்போது தெரிவித்திருந்தனர்.

செவிப்புலன் மூலமான அழகியல், அனுபவப் பெறுகைகளை வழங்கும் இப்பாடல் மரபு, உள ரீதியாக ஒருவரை ஆற்றுப்படுத்தக்கூடியதாகவும், நேரடியாகவும், தேவைக்கேற்ப புதிய உருவாக்கங்களாகவும் பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டு விடயங்களைப் பேசுவதாகவும் அமைந்து, அபிவிருத்தித் தொடர்பாடலிலும் முக்கிய பங்கையாற்றுவதாக விளங்குகின்றது.

தலைமுறை தலைமுறையாக இளைய தலைமுறையினருக்கு, செழுமை நிறைந்த மொழிப்புலமையோடு கூடிய அறிவானது பரிமாறப்படவும், காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற வழக்காறுகள், நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் வழியே பண்பாட்டுப் பரிமாற்றத்தை வளர்க்கின்ற ஊடகமாகக் காணப்படுவதும், ஆரம்பகாலத்தில் மக்களிடையே காணப்படுகின்ற மனோநிலைகளை வெளிப்படுத்தவும், பொழுதுபோக்கு மற்றும் குழு ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகளை வளர்க்கவும், கவி முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக அமைந்திருந்திருக்கின்றது.

இன்றைய காலங்களில் வாழ்க்கை முறையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் குறிப்பாக “நவீன நிலைகளுடன் கூடிய வாழ்க்கை முறைக்கு மக்கள் பழகிக் கொண்டமை, தொழில் முறைகளில் ஏற்பட்டிருக்கின்ற இயந்திரமயமாக்கம், பொழுதைக் கழிப்பதற்கான ஓய்வு நேரம் இல்லாமல் போனமை கவிப் பாடல்களைப் பாடுவது மக்களிடையே குறைவடைய முக்கிய காரணங்களாகும்” என்று கவி பாடிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலங்களின் சுழற்சியில் கவிகளை இளைய தலைமுறையினர் கேட்டு மகிழ்வதற்கான உளப் பாங்குகளை வளர்த்துக்கொள்வதோடு, அவை மறைந்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

# “நீ வாய் திறந்த நாள்”



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதி முடித்த காலகட்டமது, பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன். பரீட்சை பெறுபேறுகள் மறுதினம் வெளி வருவதாக பத்திரிகைகள் செய்திகளை தாங்கி வந்தன.

மறுநாள் காலை மிகுந்த படபடப்பும், பதட்டமும் எனக்குள் ஏற்பட்டது.

பெறுபேறுகள் எவ்வாறு அமையுமோ என்ற கவலையும், அந்த பெறுபேறுகள் எனது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை கொண்டு வருமா? என்ற ஒரு ஏக்கமும் என்னுள் எழுந்து கொண்டிருந்தன.

தொழில்நுட்பம் வளர்ச்சி அடையாத ஒரு காலகட்டமாகையால் தற்காலம் போல நிகழ்நிலையில் பெறுபேறுகளைப் பார்க்க முடியாத ஒரு நிலைமை. மறுநாள் வழமை போல, பொழுது புலர்ந்தது. நேரம் ஒன்பது மணியிருக்கும்.

நானும் சக நண்பர்களும் பாடசாலைக்கு அருகில் உள்ள தனியார் வங்கிக்கு அருகாமையில் நின்று கொண்டு தபாற்காரரின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தோம்.

அந்நேரத்தில் தபாற்காரர் எமக்கு ஒரு தெய்வமாகக் காணப்பட்டார். நினைத்தது போல அவரும் வந்து பாடசாலையில் பரீட்சை பெறுபேறு கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்று விட்டார்.

இதுபோல, பல்கலைக்கழக அனுமதி தொழில் வாய்ப்பு, போன்ற பல்வேறு நிகழ்வுகளிலும் தபாற்காரரும், தபால் நிலையங்களும் எனது வாழ்வில் மிக முக்கிய பங்களிப்பை ஆற்றியமையை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

அந்த அளவுக்கு எங்களது வாழ்வில் இந்த அரச நிறுவனமும், இந்த அதிகாரிகளும் பின்னிப் பிணைந்திருந்த காலகட்டமது. அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததாக அஞ்சல் சேவை உலகிலும், இலங்கையிலும் காணப்படுகிறது.

அவ்வாறான சேவைக்காகக் கொண்டாடப்படுகின்ற தினம் தான் இன்றைய ‘உலக அஞ்சல் தினம்’ ஆகும். 1874 அக்டோபர் மாதம் 9ஆம் திகதி சுவிஸ்சர்லாந்தில் உள்ள பேர்ன் நகரில் கைச்சாத்திடப்பட்ட ‘பேர்ன் ஒப்பந்தத்தின்’ ஊடாக ஆரம்பிக்கப்பட்ட ஜெனரல் போஸ்டல் யூனியன் அமைப்பு, 1878இல் ‘அனைத்துலக அஞ்சல் ஒன்றியம்’ ஆக மாற்றமடைந்தது.

1969இல் டோக்கியோவில் நடைபெற்ற உலக தபால் யூனியனின் மகாநாட்டில், அக்டோபர் ஒன்பதாம் திகதியினை உலக அஞ்சல் தினமாகக் கொண்டாடுவது என அறிவிக்கப்பட்டது. உலக அஞ்சல் தினப் பிரகடனமாகப் பிரேரிக்கப்பட்ட பிரேரணை பின்வருமாறு அமைந்திருந்தது.

“உலக அஞ்சல் தினப் பிரகடனம் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் உரிய புவியியல், அரசியல், மதம் போன்ற பல்வேறு எல்லைகளையும், தடைகளையும் தாண்டி எமது மக்களை முழு உலகுக்கும் இணைக்கின்றோம்.

மக்கள் அவர்களுக்குரிய பிரத்தியேகமானதும், மிகப் பெறுமதி வாய்ந்ததுமான தகவல்களையும், பொருட்களையும் எம்மிடம் ஒப்படைப்பது, அவற்றைப் பாதுகாத்து மிக வேகமாகவும் மிகக் கவனத்துடனும் அதன் உரிமையாளர்களுக்கு ஒப்படைப்பார்கள் என்ற எம்மீதுள்ள பெரு நம்பிக்கை என்பதை நாம் அறிந்துள்ளதோடு, அவர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உயர் செயற் திறமையுடனும், நேர்மையுடனும், பாதுகாப்புடனும் இரகசியத் தன்மையைப் பேணி அவர்களுடைய தகவல்களையும், பொருட்களையும், உரிமைகளையும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், நேற்றைய தினத்தை விட நன்றாக இன்றைய தினத்திலும், இன்றைய தினத்தை விட நன்றாக நாளைய தினத்திலும் திறமையான சேவையை மக்களுக்கு வழங்குவதற்கு அர்ப்பணத்துடன் செயற்படுவோம்”

இருபத்திரெண்டு நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அனைத்துலக அஞ்சல் ஒன்றியத்தில் இன்று 192 நாடுகள் அங்கத்துவம் வகிப்பதானது சர்வதேச ஒத்துழைப்பின் அஞ்சல் அலுவலகத்தின் பலத்தை வலியுறுத்திக் காட்டுகின்றது.

150ஆவது வருடத்தில் தடம் பதிக்கும் உலக அஞ்சல் ஒன்றியத்தின் இந்த ஆண்டுக்கான கருப்பொருளானது ‘நூற்றைம்பது ஆண்டுகள் தகவல் தொடர்பு மற்றும் நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு அதிகாரம் அளித்தல்’ என்பதாகும்.

எமது தாய் நாடான இலங்கை குடியேற்ற ஆட்சி முறையின் கீழ் 01.04.1877 லும், நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர் 13.07.1949இல் இந்த ஒன்றியத்தில் மீள இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கை ஆட்சி செய்யப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் 1798இல் ஆட்சியாளராக இருந்த ஒல்லாந்தர்கள் தமது ஆட்சிக் காலத்தில் கடலோரப் பகுதியில் முதலாவது அஞ்சல் அலுவலகத்தை அமைத்தனர்.

1799இல் முதன் முறையாக அஞ்சல் விதிமுறைகளை வெளியிடுதலுடன் ஆரம்பிக்கப்பட்ட ‘இலங்கை அஞ்சல் சேவை’க்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலான நீண்ட வரலாறு உள்ளது.

1815ஆம் ஆண்டு, பிரித்தானியர் வசம் எமது நாடு சென்றது. இவர்களது காலகட்டத்தில், எமது நாட்டின் தபால், தந்தி சேவை அமைப்பில் பெரும் மாற்றம் ஏற்பட்டது . இவர்கள் இந்த சேவையை ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டு வந்தனர்.

1815ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கையில் ஆறு தபால் அலுவலகங்கள் கொழும்பு, காலி மாத்தறை, மன்னார் திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையின் தபால் சேவை வரலாற்றில், 1832ஆம் ஆண்டு ஒரு மைல் கல்லாகும். ஆசியாவிலேயே முதலாவதாக ‘குதிரை வண்டி’ மூலமாகத் தபால்களைப் பட்டுவாடா செய்யப்பட்டது எமது நாட்டிலேயே ஆகும்.

அதே போல, 1865ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து அம்பேபுசவிற்கு முதலாவது இரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதன் மூலம், ரயில் சேவை மூலமாகக் கடிதங்களை உரிய நேரத்தில் சேர்க்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

22.08.1872ஆம் ஆண்டு முதன் முதல் தபால் அட்டை அறிமுகமானது . 01.02. 1893ஆம் ஆண்டு முதலாவது தபால் முத்திரை இலங்கை நாணயத்தில் வெளியிடப்பட்டது. இதேபோல, உலகின் முதன் முதல் அஞ்சல் தலையை வெளியிட்ட பெருமை பிரித்தானியாவையே சாரும்.

ஆங்கிலேயர்களது பரிபாலனத்தின் கீழ் 1882ஆம் ஆண்டு நிரந்தர தபால் அலுவலகம் கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு முதலாவது கடித முத்திரை ‘ஸ்ரீலங்கா’ என்னும் பெயருடன் வெளியிடப்பட்டது.

அஞ்சல் சேவை வரிசையில், மக்களது பார்வையில் மிக எளிதாகத் தெரியக் கூடியதாகச் சிவப்பு வர்ணம் தீட்டப்பட்ட தபால் பெட்டிகளை அமைக்கப் பிரித்தானிய அரசு அறிவுறுத்தியது.

அன்றிலிருந்து இன்றுவரை சிவப்பு நிற தபாற் பெட்டிகளை எங்கும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்று உலகில் சுமார் 650,000க்கு மேலதிகமான நிரந்தர அஞ்சல் அலுவலகங்கள் இயங்குவதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 5 .3 மில்லியன் ஊழியர்கள் உலகத் தபாலகங்களில் வேலை செய்வதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சுமார் 4,992 அஞ்சல் அலுவலகங்கள் இருப்பதாகவும், பல்வேறுபட்ட தரத்தில் கடமையாற்றும் தபாலக ஊழியர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 19,000 க்கு மேற்பட்டதாகவும் உள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு 2,400 மக்களுக்கும் ஒரு அஞ்சல் அலுவலகம் என்ற வகையில் இன்று எம் நாட்டில் அஞ்சல் அலுவலகங்கள் காணப்படுகின்றன.

இன்று பரவலாக உலக நாடுகளில் ‘தபால் குறியீட்டு முறை’ அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. முதன்முதலில் 1941ஆம் ஆண்டு ஜேர்மனியே இந்த முறையை அறிமுகப்படுத்தியது. பின்னர் உலகின் பல நாடுகளும் இம்முறையினைத் தத்தமது நாடுகளில் அறிமுகப்படுத்தின.

எமது நாடான இலங்கையிலும் தபால் குறியீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், மக்கள் இதில் பெரிதும் ஆர்வம் காட்டாததன் காரணமாக இந்த முறையில் ஒரு பின்னடைவு காணப்படுகின்றது. இதன் காரணமாகப் பிற நாடுகளில் பணிபுரியும் எம்மவர்கள் சில விண்ணப்பங்களை நிரப்புகின்ற பொழுது எமக்குரிய தபால் குறியீட்டினை சரியாக, தெளிவாகக் குறிப்பிட முடியாத நிலையில் உள்ளனர். இதனால் பல அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர்.

ஆகவே, இதில் உள்ள குறைபாடுகளைக் களைந்து தபால் குறியீட்டு முறையினை முறையாகப் பின்பற்ற வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். உலகில் வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் தொலைத்தொடர்புத் துறையும் ஒன்றாகும். தபாலகங்கள் இன்று தமது சேவையினை பல்வேறுபட்ட ரீதியில் விஸ்தரித்து உள்ளது.

மக்களிடையே தொடர்பாடல் மாத்திரமின்றி, பொருள் கொடுக்கல்-வாங்கல், ஓய்வூதியத் தொகை வழங்குதல், மின்சாரம், தண்ணீர் போன்ற சேவைகளுக்கான கட்டணங்களை வசூலித்தல், இணையம் மூலமான வர்த்தகம் செய்தல், மோட்டார் வாகனங்களுக்கான தண்டனை பணம் பெறுதல், பரீட்சை திணைக்களத்திற்கான பரீட்சைக் கட்டணத்தைப் பெறுதல், B- Post ஆகிய முறையின் ஊடாக வெளிநாடுகளிலிருந்து பொருட்களைப் பாதுகாப்பாக இந்த நாட்டிற்குக் கொண்டு வருதல், சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின், உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், உள்நாட்டுத் தொழில் முனைவோருக்கு சேவைகளை வழங்குதல், தந்திச் சேவை, தொலைபேசி சேவை, வான் கடிதங்கள், சேமிப்பு வங்கி திட்டம், அஞ்சல் காசோலை முறை போன்ற பல்வேறுபட்ட சேவைகளை இன்று தபாலகங்கள் வழங்கி வருகின்றன.

கடந்த காலங்களில் உலகளாவிய ரீதியில் நிலவிய கொரோனா என்ற கொடிய தொற்றின் காரணமாகத் தபால் விநியோக செயல்முறைகளிலும் ஒரு பெரும் பின்னடைவு ஏற்பட்டிருந்தது.

எமது நாட்டிலும் கூட தபாற் சேவைகள் மூலமாகக் கிடைக்கின்ற பெருமளவான வருமானங்கள் அன்றைய காலத்தில் கிடைக்காமல் இருந்திருந்தன.

எனினும், தபால் சேவையானது ஏதோ ஒரு விதத்தில் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருந்ததனைக் குறிப்பிடல் அவசியமாகும்.அத்துடன் தபால் சேவை என்பது இன்றைய மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளமை வெளிப்படையானது.




சுப்பிரமணியன் ஜனுர்ஷா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# இடையர்களின் இடர் ‘கீதாரி’

வரலாற்றுப் பின்னணிகளில் தொழிலை அடிப்படையாகக் கொண்டு சமூகங்களை வேறுபடுத்தும் நடைமுறைகளையும், சமூக முரண்பாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்கியதன் தொடர்ச்சி இன்றுவரை முடிவு காணா சமூக பிரச்சினைகளாகவே உள்ளன.






தொழில் பிரிப்பானது ஒரு சமூகத்தையே ஓரங்கட்டும் என்பது நிதர்சனம். சமூகத்திலே ஒதுக்கப்பட்ட சமூகத்தவர்களது வாழ்வியலையும், அவலங்களையும் வெளிச் சமூகத்திற்கு எடுத்துரைப்பதற்காகப் பல எழுத்துக்கள் எழுந்துள்ளன. அந்தவகையில், இடையர்களின் இடர் நிறைந்த வாழ்க்கைச் சூழல்களைப் பிரதிபலிக்கும் ஒரு படைப்பாக ‘கீதாரி’ என்ற நாவல் அமையப்பெற்றுள்ளது என்றால் மிகையாகாது. இந்நாவலானது 2008 இல் எழுத்தாளர் சு.தமிழ்செல்வி என்பவரால் எழுதப்பட்ட காத்திரமான நாவலாகும். எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வியின் எழுத்தில் உருவாகிய மாணிக்கம், அளம் நாவல்களின் தொடர்ச்சியாக ‘கீதாரி’ எனும் நாவலும் எழுந்துள்ளது. நாவலின் தலைப்பானது ஏதோ ஒரு அர்த்தத்தின் வெளிப்பாடாகவே அமையும் என்பது போல, இந்நாவலும் குழுவாக ஒன்றிணைந்து தங்களது ஜீவனோபாய தொழிலான ஆடு மேய்க்கும் தொழிலை மேற்கொண்டு வாழும் சமூகத்தில் அனுபவம் வாய்ந்த நபர் ஒருவர் இக்குழுவில் தலைமைப் பணியைப் பொறுப்பேற்று நடத்துவார். அவரை கீதாரி என்று அழைப்பர். அந்த அடிப்படையிலே, இந்நாவலும் ராமு கீதாரி என்பவரின் குடும்பத்தை மையங்கொண்டு சுழல்கின்றது.

மேய்ச்சல் தொழில் புரியும் ஒரு சமூகத்தின் இன்னல்களைப் பிரதிபலிப்பதாகப் படைக்கப்பட்டுள்ள இந்நாவலில் ராமுகீதாரி அவரது மனைவி இருளாயி, மகள் மூத்தம்மாள், வெள்ளைச்சாமி எனும் வளர்ப்பு மகன், கரிச்சா, சிவப்பி மற்றும் சேது ஆகிய கதாபாத்திரங்கள் அவ் இனத்தின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் உணர்ச்சி ததும்பிய கதாபாத்திரங்களாகக் கீதாரி நாவலில் வலம் வருகின்றனர். கீதாரி நாவலானது ஆடு மேய்க்கும் இடையர்களின் மொத்த வாழ்க்கைச் சூழலையும் உணர்ச்சிப் பூர்வமாக வெளிப்படுத்துவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கதையானது முழுக்க முழுக்க மேய்ச்சல் வாழ்க்கையில் ஈடுபடும் மக்களின் வாழ்க்கை பின்னணியில் ஏராளமான நுண்ணிய செய்திகளை இந்நாவல் படம் பிடித்துள்ளது.

கதைச் சுருக்கம் குறித்து பார்த்தோமாயின், ராமு கீதாரி மற்றும் அவரது மனைவி இருளாயி அவர்களது குழந்தை மூத்தம்மாள் என குடும்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மூத்தம்மாளுக்கு திருமணம் செய்து கொடுக்கிறார்கள். பண்ணையாளரிடம் அடிமையாக இருந்த இரண்டு பையன்களில் வெள்ளைச்சாமியை ராமு தனது வளர்ப்பு மகனாக வளர்க்கின்றார். இந்நிலையில், மனநிலை பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணொருத்தி ராமு கீதாரியின் குடில் அருகே பிரசவ வலியுடன் ஒதுங்க ஆடுகளுக்குப் பிரசவம் பார்த்த அனுபவத்தில் ராமு கீதாரி பிரசவம் பார்த்து இரண்டு பெண் குழந்தைகள் பிறக்கின்றனர். ஊர் மக்கள் யாவரும் குழந்தைகளை யார் பொறுப்பேற்பது என பின்வாங்க ராமு வறுமையில் இருந்தாலும் மனிதநேயத்துடன் குழந்தைகளைத் தான் வளர்ப்பதாகப் பொறுப்பேற்கின்றார். இந்த சந்தர்ப்பத்தில், பண்ணையாளர் சாம்சிவம் சில காலங்களின் பின்னர் ஒரு குழந்தையைத் தான் வளர்ப்பதாக வாக்குறுதி கொடுக்கின்றார். பின்னர் குழந்தைகளுக்குச் சிவப்பி, கரிச்சா என பெயர் சூட்டி தனது குழந்தைகளைப் போல நான்கு பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் ராமு மற்றும் இருளாயி.

நாளடைவில் சிவப்பியைப் பண்ணையாளர் சாம்பசிவம் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று பணிப் பெண்ணாக்குகின்றார். குழந்தைகள் பருவ காலத்தை அடைந்ததும் கரிச்சாவிற்கு திருமண பேச்சு வர ஊரார் வெள்ளைச்சாமி மற்றும் கரிச்சாவை தவறாகப் பேச ஆரம்பித்தனர். முடிவில்

> பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற வன்முறைகள் சார்ந்த செயல்பாடுகள் இந்நாவலிலே கதாபாத்திரங்களை அடியொட்டியாகப் பேசப்பட்டுள்ளது. மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணை கூட விட்டு வைக்காத இந்த சமூகத்தின் நிலைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது

> தந்தையால் பிள்ளைகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் கொடூரம் அந்த சமூகத்திலும் காணப்பட்டுள்ளது. வரதட்சணை வாங்கும் வழக்கம் அன்றைக்கும் வழக்கில் தான் இருந்தது. ஆடுகளை வரதட்சணையாக வழங்குதல், பொருட்களை வழங்குதல் என்பன கீதாரி சமூகத்திலும் காணப்பட்டுள்ளன

> பல இன்னல்களைச் சந்திக்கும் அவல வாழ்க்கையினை உடைய ஆநிரைகளைப் பராமரித்து அவற்றுடன் சகஜமாக உறவாடி ஆத்மார்த்தமான உறவுகளுடன் வாழும் இடையர்களின் வாழ்க்கை பதிவாகிய இந்த நாவல் சமூகத்தில் காணப்படும் பல பிரச்சினைகளை இடையர்களின் வாழ்க்கைகளோடு இணைத்துப் பேசியுள்ளது

வெள்ளைச்சாமியும் கரிச்சாவும் திருமணம் செய்து கொண்டு தங்களது வாழ்க்கையை வாழ ஆரம்பித்தனர். சிவப்பி பண்ணையாளரது பாலியல் இச்சையால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு தற்கொலை செய்து கொள்கின்றாள். இத்துயரம் நிறைந்த வாழ்க்கையில் கரிச்சா திருமணமாகி நீண்ட காலமாகக் குழந்தைப்பேறு இன்றி இருப்பதனால் வெள்ளைச்சாமி தனது அண்ணன் மற்றும் அண்ணனின் மனைவியினால் மனம் மாற்றப்பட்டு கரிச்சாவை விட்டு விலகுகின்றார். மீண்டும் கரிச்சா தனது வளர்ப்புத் தந்தை ராமுவுடன் வாழ்ந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கரிச்சா கருவுற்று இருந்த போதும், தான் மீண்டும் வெள்ளைச்சாமி உடன் வாழ மாட்டேன் என மனத்திடத்துடன் வாழ்கின்றாள். இறுதியில் பாம்பு தீண்டி கரிச்சா இறந்து விட கரிச்சாவின் குழந்தையை மீண்டும் தொழில் சுமக்க ஆரம்பிக்கின்றார் ராமு. இவ்வாறான கதையோட்டத்துடன் இந்நாவலானது முற்றுப்பெறுகின்றது.

இடையர்களின் இடர் நிறைந்த வாழ்க்கையைக் கீதாரி நாவலில் கடந்து செல்லும் பொழுதுகளில் சில கனம் இப்படியும் மனித குலங்கள் தங்களது வாழ்க்கையில் பல அவலங்களைச் சந்திக்கின்றார்களா என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கின்றது. ஒரு நாவல் ஒரு சமூகத்தைப் பற்றிப் பேச முற்படும் பொழுது அந்த மக்களது வாழ்வியலோடு அழைத்துச் செல்ல வேண்டிய கடப்பாடு உள்ளது. அந்தவகையில், கீதாரி நாவல் ஆடு மேய்க்கும் சமூகத்தினரின் வாழ்க்கைச் சடங்குகள், இரவில் ஆட்டுக்குக் காவல் காத்தல், இன்னொரு பக்கம் கிடைபோட்டிருக்கும் நிலத்துக்குச் சொந்தமானவர்களால் ஏமாற்றப்பட்டுதல், நில உடைமையாளர்களிடம் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் உயிரைப் பலியாக்குவது, குடும்பச் சூழல், உணவு முறைகள், வீட்டு அமைப்புகள், ஆடுகளுடன் அவர்கள் கொண்டிருக்கக் கூடிய ஆத்மார்த்தமான உணர்வு, அன்பின் வெளிப்பாடு, திருமணச் சடங்கு, கணவன் இறந்து விட்டால் அவனுடைய தம்பியை மணம் முடித்துக் கொடுப்பது, திருமணம் ஏற்பாடு செய்து குறித்த நபரால் திருமணத்தில் மாப்பிள்ளையாகக் கலந்துகொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் அவர் பயன்படுத்தக்கூடிய கைகம்பை மணமகனாகப் பாவித்து திருமணம் செய்து கொள்ளும் மரபு. உண்மையிலேயே வித்தியாசமான ஒரு சடங்காக இந்நாவலில் அறியக்கூடியதாக இருந்தது. இவ்வாறாக ஆடு மேய்க்கும் ஒரு சமூகத்தின் மொத்த வாழ்க்கையையும் யதார்த்தமாக நாவல் எழுத்துக்களால் பிரதி செய்துள்ளது.

இடையர் சமூகத்தின் நிலையில்லாத நாடோடி வாழ்க்கையில் தொடர்கின்ற பல பிரச்சினை சம்பவங்கள் இந்நாவலிலே பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நிலவுடைமை கொண்ட சொத்துரிமையாளர்களின் பிடியின் கீழே பணியாற்றுகின்ற தொழிலாளிகள் எவ்வாறு கொடூரங்களுக்கு ஆட்பட நேரிடுகின்றன, தொழிலாளர்கள் எவ்வளவு பிரச்சினைகளை சமாளிக்க வேண்டி இருக்கின்றன என்பன கதையோட்டத்திலே கடந்து செல்கின்றன. நிலவுடைமை கொண்ட பண்ணையாளர் சாம்பசிவம் தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிய போர்வையில் சிவப்பியை ஆறு வயதில் தத்து எடுத்துச் சென்றாலும் தனது பிள்ளையாக வளர்க்காது, வீட்டுப் பணிப் பெண்ணாகவே நடத்தியுள்ளார். அதுமட்டுமல்லாமல், மோக மிகுதியால் சிவப்பியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி உள்ளார். விரத்தியின் விளிம்பில் சிவப்பி தற்கொலை செய்து கொண்டாலும் ஆதிக்க சக்திகளுக்கு எப்போதும் அடி சருக்காது என்பது உண்மைதான் போல. சாம்பசிவம் தவறு செய்து இருந்தாலும் எவ்வித தண்டனையோ, அபராதமோ அவருக்கு வழங்கப்படவில்லை. யாரும் எதிர்த்தும் எதுவும் கேட்கவில்லை. இது யதார்த்தத்தின் வெளிப்பாடாகவே இந்நாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற வன்முறைகள் சார்ந்த செயல்பாடுகள் இந்நாவலிலே கதாபாத்திரங்களை அடியொட்டியாகப் பேசப்பட்டுள்ளது. மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணை கூட விட்டு வைக்காத இந்த சமூகத்தின் நிலைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல், மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்குக் குழந்தை பிறந்த போது அந்த குழந்தைகளே தாங்கள் பொறுப்பேற்க இயலாது என ராமு கீதாரியின் மனைவி தனது விருப்பமின்மையை வெளிப்படையாகக் கூற முற்பட்டபோது, ராமு கீதாரி “வாய மூடிட்டு சும்மா கெடடி நாயே.. பெருசா பேச வந்துட்ட இப்பதான நியாயம் கெட்டவமேரி..” என்று அதட்டி பதில் சொல்லுவார். குடும்ப உறவிலே பெண்கள் தங்களது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தக்கூடிய கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது என்பது இப் பகுதியினூடாக எடுத்தியம்பப்படுகிறது.

ஆணும் பெண்ணும் சிரித்துப் பேசினால் காதல் என பட்டம் சூட்டும் சமூகம் இன்றைக்கும் அழியவில்லை. இதனைக் கீதாரியும் பேசத் தவறவில்லை. வெள்ளைச்சாமி கரிச்சா இருவரும் உடன் பிறவா அண்ணன் தங்கைகளாக ஒரு வீட்டில் வளர்ந்தாலும் இந்த சமூகம் அவர்களைத் தவறாகப் பேசிய அவலத்தின் தொடக்கம் இவர்களின் திருமணத்தில் முடிந்தது. இந்த திருமணம் சற்று மனதில் கனக்கத் தான் செய்தது. தந்தையால் பிள்ளைகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் கொடூரம் அந்த சமூகத்திலும் காணப்பட்டுள்ளது. வரதட்சணை வாங்கும் வழக்கம் அன்றைக்கும் வழக்கில் தான் இருந்தது. ஆடுகளை வரதட்சணையாக வழங்குதல், பொருட்களை வழங்குதல், என்பன கீதாரி சமூகத்திலும் காணப்பட்டுள்ளன.

அதுமட்டுமில்லாமல், ‘கரிச்சா’ என்ற பாத்திரம் துயரத்தின் வெளிப்பாட்டுப் பாத்திரமாகக் காணப்படுகின்றாள். இன்றைக்குக் குழந்தையின்மை பிரச்சினைக்குப் பல நவீன தீர்வுகள் வளர்ந்து வந்துள்ளன. ஆனால், அன்றைய காலங்களிலே பெண்கள் குழந்தை பெறாது மலட்டுத் தன்மை உடையவளாக இருந்தால் அவளை இந்த சமூகம் ‘மலடி’ என்று வார்த்தை வீசுகின்ற அவலம் காணப்பட்டுள்ளது. இதனை கரிச்சா என்ற பாத்திரம் மிக உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்துகின்றது. அவளால் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாதமையினால் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் இந்தப் பெண் தன்னுடைய வலியையும், வேதனைகளையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஆடுகளை வளர்ப்பதில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் மனதிடம் உடைய கதாபாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை உண்மையிலே மனதைக் கவர்ந்த கதாபாத்திரம் தான். கருவுற்று இருந்த நிலையிலும் தன்னை வேண்டாம் என ஒதுக்கிய கணவனிடம் மீண்டும் செல்ல மாட்டேன் என்று மன தைரியத்துடன் சுயமாகத் தொழில் முயற்சியில் ஈடுபடும் ஒரு முற்போக்கான கதாபாத்திரம் தான் கரிச்சா. அவள் நிறத்தால் ஒதுக்கப்பட்டவளாக இருப்பினும் மன தைரியத்தால் முன் நிற்கும் கதாபாத்திரமாக இந்நாவலில் வலம் வருகின்றாள்.

பல இன்னல்களைச் சந்திக்கும் அவல வாழ்க்கையினை உடைய ஆநிரைகளைப் பராமரித்து அவற்றுடன் சகஜமாக உறவாடி ஆத்மார்த்தமான உறவுகளுடன் வாழும் இடையர்களின் வாழ்க்கை பதிவாகிய இந்த நாவல் சமூகத்தில் காணப்படும் பல பிரச்சினைகளை இடையர்களின் வாழ்க்கைகளோடு இணைத்துப் பேசியுள்ளது. வயல்கள், காடுகள் என தங்கி தொழிலையும், குடும்ப வாழ்க்கையும் நகர்த்தும் ஆடு மேய்ப்பவர்களின் வாழ்க்கை பயணத்தை உணர்வலைகளுடன் கோர்த்துப் பயணப்படுகின்ற கீதாரி நாவலானது கதையின் முடிவிலே கரிச்சாவின் குழந்தையைத் தோலில் சுமக்க ஆரம்பிக்கும் ராமுவின் சுமையுடன் முற்றுப்பெறுகின்றது. ஆடு மேய்க்கும் தொழிலாளர்களுக்குப் பிரச்சினை என்பது எப்போதும் குறைவடைவது கிடையாது. அவர்கள் என்றுமே சுமை தாங்கிகளாக தங்கள் வாழ்க்கையை வாழ்கின்றார்கள் என்பதனை அர்த்தப்படுத்துகின்றது. எழுத்துக்களின் ஊடாக பரந்த அறிவினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதற்கிணங்க கீதாரி எனும் இந்நாவலானது ஒரு சமூகத்தைப் பற்றிய அறிவை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.



# “எங்கள் இரத்தம்”

**இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை தூளினால் தேநீர் தயாரிக்கப்பட்டு அதனை ரசனையோடு வெளி நாடுகளில் உள்ளவர்கள் பருகி வருகின்றனர்**

**புஷ்பராஜ் குழந்தைவேல்**

மலையகம் இன்று பசுமையாக இருப்பதற்குக் காரணம் முன்னோர்கள் செய்த அர்ப்பணிப்பு தான் இலங்கை பொருளாதார வளர்ச்சிக்கு அந்நிய செலாவணியை ஈன்றெடுப்பதற்கு பெரும் பங்கை இவர்களே வழங்கியுள்ளனர். இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட இவர்கள் காடாகக் காணப்பட்ட மேட்டு நிலங்களைத் துப்புரவு செய்து அதனை உற்பத்தி செய்யக்கூடிய நிலங்களாக மாற்றி அமைத்து தேயிலை செடிகளை நாட்டினர். எத்தனையோ உயிர்கள் மண்ணுக்கு உரமாகினர்.

தேயிலை செடிகளை கவ்வாத்து வெட்டி, முள்ளு குத்தி, உரமிட்டு, தேயிலை செடிகளில் படரும் புற்களைத் துப்புரவு செய்து, மருந்து தெளித்து, தேயிலை வாதுகள் உக்கிபோகாமல் இருப்பதற்கு சுண்ணாம்பு மற்றும் தார் பூசுதல் போன்ற எத்தனையோ வகையான பாதுகாப்பினை இந்த தேயிலை செடியின் வளர்ச்சிக்கு எம்மவர்கள் உறுதுணையாக இருந்துள்ளார்கள்.

நாட்டப்பட்ட தேயிலைச் செடிகளை இரவும் பகலாகப் பாதுகாத்து மரமாக்கிய பெருமை இவர்களையே சார்ந்தது. எப்போதும் தொழிலுக்கு வஞ்சகம் செய்யாத இம்மக்கள், செடிகளை தமது குழந்தை போல் பராமரித்தனர்.

இதன் காரணமாகவே இலங்கை நாட்டின் பொருளாதாரம் மேலும் உயர்வதற்கு இவர்களால் உற்பத்தி செய்யப்பட்டுத் தயாரிக்கப்பட்ட தேயிலை தூள் உலக நாடுகளிலும் இடம் பிடித்ததோடு, நட்பேரையும் தனதாக்கிக்கிக் கொண்டது.

இன்றும் எமது தேயிலைக்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்பும் கிராக்கியும் இருப்பது எமக்குக் கிடைத்த அங்கீகாரம் என கூறலாம். இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை தூளினால் தேநீர் தயாரிக்கப்பட்டு அதனை ரசனையோடு வெளி நாடுகளில் உள்ளவர்கள் பருகி வருகின்றனர்.

தேயிலை மலையில் கொழுந்து பறிக்கும் தொழில் என்பது இலகுவான காரியமல்ல, பாம்புக் கடி, சிறுத்தை தாக்குதல், குளவி கொட்டுதல், மின்னல் தாக்குதல், மரம் முறிந்து விழுதல், வலிக்கு விழுதல், வாகன விபத்துக்கள், தேயிலை தொழிற்சாலையில் ஏற்படும் விபத்துக்கள் என பட்டியலிட்டுக் காட்டக்கூடிய அளவிற்குத் தோட்டத் தொழிலாளர்கள் தங்களின் உயிரைத் துச்சமாக நினைத்து இத்தொழிலைத் தெய்வமாக மதித்துச் செய்து வருகின்றார்கள்.

தொழிலில் ஈடுபடும்போது, எத்தனையோ பேர் அனாதைகளாக இறந்து கிடந்த சம்பவங்களும் ஞாபகத்துக்கு வருகின்றன.

இவ்வாறு பறிக்கப்பட்டுத் தயாரிக்கப்படும் தேயிலை தூளின் தரம் பல்வேறு வகைகளில் உள்ளன. Tea grade, Dust no 01, Dust 02, Bope, Bop, Fannings 01, BM என ஏழு வகைகளாகத் தரப்படுத்தப்பட்டு அதற்கு ஏற்றவாறு விலை அதிகரிப்பில் விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால், மிகவும் கஷ்டப்பட்டு இத்தொழிலைச் செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தேயிலையானது மிகவும் தரக் குறைந்த labour dust என பெயர் சூட்டப்பட்ட தேயிலை துளையே தோட்ட நிர்வாகங்கள் வழங்கி வருகின்றன. தோட்டங்களை நிர்வாகம் செய்த வெள்ளைக்காரர்களால் அப்போது தேயிலை தூள் ஒரு இராத்தல் வழங்கப்பட்டு அது படிப்படியாக மாறி அரை கிலோ தற்போது இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

நாடு முன்னேற்ற அடைந்து வரும் நிலையில், தொழிலாளர்களுக்கு ஆரம்பம் தொட்டு வழங்கப்பட்ட தேயிலை இன்னும் மாற்றம் பெறாமல் அதே நிறையைக் கொண்ட தூளினை தோட்ட நிர்வாகங்கள் வழங்கி வருவது சரிதானா என்பதனை மக்கள் மத்தியில் 200 வருடங்களுக்குப் பின்பு ஆராய்கின்றோம். தொழிலாளர்கள் கூறும் கதை தான் என்ன என்பதனை பார்ப்போம்.

## தீபமலர்




இவர், 20 வருடம் தொழிலாளி நான் 20 வருடம் தோட்டத் தொழிலாளியாக இருந்து வருகிறேன். நாங்கள் எப்போதும் எங்களுடைய தொழிலுக்குத் துரோகம் செய்வதில்லை. எங்களுடைய தொழிலை மனசாட்சிக்குச் செய்து வருகின்றோம். நாங்கள் பறிக்கும் தேயிலை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றார்கள் என்பதனை கேள்விப்பட்டிருக்கின்றோம்.

ஆனால், இவ்வாறு கஷ்டப்பட்டு நாங்கள் பறிக்கும் தேயிலை தூளில் பல்வேறு வகைகள் இருப்பதாகப் பலர் கூறி இருக்கின்றார்கள். எங்களுக்கு மாதாந்தம் 500 கிராம் தேயிலை தூள் மாத்திரமே வழங்குகின்றார்கள். இதனை 15 நாட்களுக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும் ஒரு தேநீர் தயாரிப்பதற்கு ஒரு முறை தான் இத்தூளைப் பயன்படுத்த முடியும். தேநீரைக் குடிப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும்.

500 கிராம் நிறையில் எத்தனை தேநீர் தான் தயாரிப்பது. மாதம் இரண்டு மூன்று தடவை கடைகளில் தேயிலை தூளைப் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்கிறோம். நாங்கள் தோட்டத் தொழிலாளி என சொல்லுவதில் எந்த புண்ணியமும் இல்லை காரணம் நாங்கள் பறிக்கும் தேயிலையில் தயாரிக்கப்படும் நல்ல தரம் கொண்ட தேயிலை துளினை வெளிநாடுகளில் உள்ள வெள்ளைக்காரர்கள் ரசித்துக் குடிக்கின்றார்கள் உள்நாட்டிலும் பணம் படைத்தவர்கள் இத்தூளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் கஷ்டப்பட்டு உழைக்கும் எங்களுக்கு இதுவரை நல்ல தூளினை வழங்கியதாகக் கூறமுடியாது.

இதனை எந்தவொரு அரசியல்வாதியும் கண்டு கொள்வதில்லை, தோட்ட நிர்வாகிகளும் இவ்வாறு தான் தொடர்ந்து செயல்படுகின்றார்கள் எங்களுடைய கைகளைப் பாருங்கள், காயங்கள் தான் இருக்கின்றன தயவுசெய்து எங்களுக்கு நல்ல தரமான தேயிலையை வழங்குவதற்கு பெருந்தோட்ட கம்பெனிகள் முன்வரவேண்டும். அதற்காக, அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றார்.

## ராமசாமி ஆறுமுகம்



ராமசாமி ஆறுமுகம் (வயது 84) கூறுகையில், நான் தொழிலுக்குச் சென்றபோது, ‘ஜனவசம’ தான் தோட்டங்களை நடத்தினார்கள். 18 வயதில் தொழிலில் ஈடுபட்டு. தோட்டத்தில் செய்யாத வேலை ஒன்று என்றில்லை. அத்தனை வேலைகளையும் நான் செய்துள்ளேன். அன்று போல் தான் இன்றும் தொழிலாளிகளுடைய வாழ்க்கை இருக்கின்றது.

அப்போது கல்வி அறிவு போதியதாக இருக்கவில்லை. தற்போது எல்லா வசதிகளும் தொழில் நுட்பங்களும் இருக்கின்ற போது தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் நிர்வாகத்தால் மறுக்கப்பட்டு வருவதைக் கேட்கும் போது வேதனையாக இருக்கின்றது. நான், தொழில் செய்த காலத்தில் ஓரிரு தொழிற்சங்கங்கள் மாத்திரமே எங்களுக்காக இருந்தன. இன்று பார்க்கும்போது அதிகமான தொழிற்சங்கங்கள், அரசியல்வாதிகள் என பலரும் இருக்கின்றார்கள்

பென்ஷன் பெற்றவர்கள் என கூறி மாதாந்தம் 500 கிராம் தேயிலை எனக்கு வழங்குகின்றார்கள். இதற்கான பணத்தினை எங்களுடைய குடும்பத்தில் தொழில் செய்பவர்களிடம் அறவிடுகின்றனர். வழங்கப்படும் தேயிலையும் போதியதாக இல்லை 500 கிராம் தேயிலையில் ஒரு மாதத்தை எப்படிச் சமாளிப்பது.

தேயிலை செடியை நம்பி வாழும் எங்களுக்கு எதிர்காலம் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பதை யோசிக்கும் போது தலைச்சுற்று வந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித வசதிகளையும் நிர்வாகம் செய்து கொடுப்பதில்லை தேயிலை செடிகளைக் கூட காடாகி விட்டது. இதையெல்லாம் பேசுவதற்கு எவரும் முன்வருவதில்லை அனாதைகளாகத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம்.

## விஜயசந்திரன்



பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் விஜய சந்திரன் கூறுகையில், “தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை ஒரு மனிதர்களாக கருதுவதில்லை அவர்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட கவனித்துக் கொள்வதில்லை.தொழிலாளர்களுக்கு இருக்கின்ற தொழில் சார்ந்த அடிப்படை உரிமைகளை அனுபவிக்கத் தோட்ட நிர்வாகம் இடமளிப்பதில்லை.

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையிலே தரமான தேயிலை உற்பத்தி செய்கின்றார்கள் இலங்கையில் தயாரிக்கப்பட்டும் ‘சிலோன் டீ’ உலகில் பல பல இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் தேயிலை உற்பத்தி நாடுகளில் இலங்கை தேயிலைக்கு அதிகமான ஒரு மதிப்பும் வரவேற்பும் இருக்கின்றன.

இலங்கையில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள் இந்த தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் இவர்களை பொருத்தமட்டில் உலகத்திற்குத் தரமான தேயிலை உற்பத்தி செய்து இவர்கள் அந்த தேயிலை ருசியைப் பார்த்து இருப்பார்களா என்று சந்தேகம் இருக்கின்றது தரமான தேயிலை உற்பத்தி செய்யப்பட்ட பின் கழிவுகளாக வருகின்ற Dust என்று சொல்லப்படுகின்ற அல்லது labour Dust என்று சொல்லப்படுகின்ற அந்த ரகத் தேயிலை தூளினை தொழிலாளருக்கு வழங்குகின்றன ஒரு தொழிலாளிக்கு அல்லது தொழிலாளர் குடும்பத்திற்கு 500 கிராம் மாத்திரமே வழங்குகிறார்கள்

ஒரு குடும்பத்தில் ஐந்து அல்லது ஆறு உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஒரு மாதத்திற்குத் தேவையான தேநீர் குடிப்பதற்கு போதுமானதல்ல.

வெளிச்சந்தையில் இன்று ஒரு கிலோ 1,009 முதல் 3,000 வரை விற்பனை செய்யப்படுகிறது. தொழிலாளர்கள் வியர்வை சிந்தி உழைப்பைத் தரமானதாகச் செய்யும் தொழிலாளர்கள் 30 வருடங்கள் 50 வருடங்கள் தோட்டங்களிலேயே தொழில் பெறுகின்ற தொழிலாளர்கள் ஒரு நாளாவது Bop அல்லது போன்ற தரமான தேயிலை தூளினை ருசி பார்த்து இருப்பார்களா என்று சந்தேகம் ஏற்படுகிறது.

அடிப்படைத் தேவைகள் அல்லது அவர்களுடைய தொழில் சார்ந்த உரிமைகளைக் கூட அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள் ஆகவே வேறு எந்த தொழில்துறையை நாங்கள் பார்க்கின்ற போது அந்த தொழில் துறையில் உற்பத்தி செய்கின்ற உற்பத்திகளின் முதலாவது உற்பத்திகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தேயிலை தரமற்றதாகவும் அல்லது இறுதி நிலை கொண்டதாகக் காணப்படுகிறது இது உடல் உற்சாகத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, இது தோட்டத் தொழிலாளர்கள் பாரிய அநீதியாகும என்றார்.

## சுபையா முருகையா

மூத்த தொழிற்சங்க வாதியும் அகில இலங்கை தேசிய தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதி தலைவர் சுபையா முருகையா இது தொடர்பாகக் கூறுகையில், இலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்ற தேயிலை சர்வதேச ரீதியில் மிகவும் பிரசித்தி பெற்ற தேயிலை பானமாகச் சிறப்பை கொண்டுள்ளது.

அத்தோடு, ‘சிலோன் டீ’ என்றால் அதற்கு நல்ல மதிப்பும் இருக்கின்றன. 200 வருடங்களுக்கு மேல் தங்களுடைய உழைப்பில் தேயிலை உற்பத்திக்குத் தியாகம் செய்து மரணித்தவர்கள் லட்சக்கணக்கான மக்கள் அந்த தேயிலை செடிக்கு உரமாகி இருந்த போதிலும் தேயிலை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய தேயிலை தூள், ‘லேபர் டஸ்ட்’ என்று சுகாதாரம் தரம் குறைந்த 500 கிராம் தேயிலையில் வழங்குகின்ற முறைமை 200 வருடங்கள் கடந்த போதிலும் இது மாறவில்லை” என்றார்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தேயிலையினை வெளிநாட்டுக்காரர்கள் ரசித்து ருசித்துப் பருகுவது ‘சிலோன் டீ’ என பெயர் பெற்றுள்ள போதும். உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு மிகவும் தரம் குறைந்த தேயிலை தூளை வழங்குவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் மலையக அரசியல் தலைமைகள் இவ்விடத்தைக் கண்டும் காணாதவர்கள் போல் இருப்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே, இலங்கையில் அதுவும் மலையகத்தைப் பிரதிநிதித்துவம் படுத்தும் பலம் வாய்ந்த கட்சிகள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சனை மாத்திரமே கருத்தில் கொள்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் சரியாகக் கிடைக்கின்றதா? என்பதனை எவரும் பார்ப்பதில்லை என்றார்.

வெள்ளைக்காரர்கள் தோட்டத்தை நிர்வாக செய்யும் போது ஒரு ராத்தல் தேயிலை 45 முதல் 47 சதத்திற்கு இருந்தது. அதனை இலவசமாக வழங்கினார்கள். தற்போது அதன் விலை இரண்டு ரூபாய் 50 சதம் என அளவிடப்படுகின்றது. தேயிலையின் விலை அதிகரித்த போதிலும் இன்னும் தொழிலாளர்களுக்கு வழங்கும் தூளின் நிறை அதிகரிக்கப்படவில்லை.

இதனை எவரும் இதுவரை பேசுவதற்கு எவரும் முன்வரவில்லை. கூட்டு ஒப்பந்தம் பேச்சுவார்த்தையில் நானும் பங்கேற்று இருந்தபோது கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்குத் தேயிலை வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது .

அதில், எந்த வகையான தேயிலை வழங்க வேண்டும் அதற்கு எவ்வளவு அறவிடப்பட வேண்டும் என்பது தொடர்பான எந்த தகவலும் அங்குக் குறிப்பிடவில்லை. வழங்கப்படுகின்ற தேயிலையில் எத்தனை தேநீர் தான் இவர்களால் குடிக்க முடியும்.

நாளுக்கு நாள் தொழிற்சங்க பலமும் குறைந்து வருகின்றது. எதிர்காலம் இவர்களின் வாழ்க்கை எவ்வாறாக அமையப்போகின்றது என்பதும் ஒரு சந்தேகமாகவே இருக்கின்ற விடயமாகும்.

தற்போது அரசியல் தலைமைகளும் தங்களுடைய இலாபத்துக்காகவும் தங்களை வளப்படுத்த வேண்டும் என்பதற்காக வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள் அதனை நிறைவேற்றுவதும் இல்லை. தோட்டங்களை நிர்வாகிக்கும் அதிகாரிகள் உத்தியோகஸ்தர்கள் கம்பெனி அதிகாரிகள் என பலரும் நல்ல ரகம் கொண்ட தேயிலையை அவர்கள் தேநீர்க்குப் பயன்படுத்துகின்றனர். ஆனால், தொழிலாளர்களுக்கு மாத்திரமே கழிவு தேயிலையை வழங்குவது எந்த வகையிலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். எனவே, இவர்களுக்குத் தரமான தேயிலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் பெருந்தோட்ட கம்பெனிகள் குறிப்பாகத் தொழிற்சங்க அதிகாரிகள் முன் வர வேண்டும். அப்போதுதான் இது சாத்தியமாகும் என்றார்.





அணு ஆயுதங்களை பயன்படுத்துவோம்

# மீண்டும் மிரட்டல்

கொரியயாவில் போர் பதற்றத்தை ஏற்படுத்தும் அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுக்கு எதிராக அணு ஆயுதங்களை பயன்படுத்துவோம் என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மீண்டும் மிரட்டல் விடுத்துள்ளார்.

கிம் ஜாங் உன் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய வடகொரிய ஜனாதிபதி கிம், “கொரியாவில் போர் பதற்றத்தை ஏற்படுத்தினால் எந்தவித தயக்கங்களும் இன்றி எங்கள் எதிரிகளின் மீது எல்லா விதமான தாக்குதல்களையும் பயன்படுத்துவோம். அதில் அணு ஆயுதங்களுக்கும் விதிவிலக்கு இல்லை. தென் கொரியாவும், அமெரிக்காவும் கூட்டு அணுசக்தி அடிப்படையில் தங்கள் இராணுவக் கூட்டணியை வலுப்படுத்த முயல்வதால் வட கொரியாவின் அணுசக்தி முழுமையாக மேம்படுத்தப்பட வேண்டும். இது கொரிய நாட்டு மீதான அதிகார சமநிலையை உடைக்கும் ஆபத்தை அதிகரிக்கும்” என்று தெரிவிதுள்ளார்.

வட கொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்களை சமாளிக்கும் பொருட்டு அமெரிக்காவின் அணு ஆயுதங்கள், தென் கொரியாவின் திறன் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் நோக்கில் கடந்த ஜூலையில் இருநாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. தென் கொரியாவிடம் அணு ஆயுதங்கள் இல்லை. வட கொரியா அணு ஆயுதங்களை பயன்படுத்த முயற்சித்தால், அதுவே கிம் ஆட்சியின் முடிவாக இருக்கும் என அமெரிக்க மற்றும் தென் கொரிய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

மெக்சிகோ

# பதவியேற்ற 6 நாட்களில் மரணம்

தென்மேற்கு மெக்சிகோவில் குவேரோ மாகாணத்தில் சுமார் 2,80,000 பேர் வசிக்கும் சில்பான்சிங்கோ நகரின் மேயர் தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது.

இதில், அலெஜான்ட்ரொ ஆர்காஸ் என்பவர் வெற்றி பெற்று மேயராக பதவியேற்றார்.

இந்நிலையில், மேயராக பதவியேற்ற 6 நாட்களில் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

குவேரா மாகாணத்தில் அண்மைக் காலமாக வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது. குறிப்பாக அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதில் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு கடந்த ஜூன் மாதம் நடந்த பொதுத்தேர்தலின்போது, சுமார் 6 வேட்பாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலில்

# கையிஸ் சையத் வெற்றி

வடக்கு ஆபிரிக்க நாடான துனீஷியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கையிஸ் சையத் பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

துனீஷியாவில் கடந்த 6ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இந்த ஜனாதிபதித் தேர்தலில், வெறும் 28.8 சதவித வாக்குகள் மட்டுமே பதிவாகின. இந்நிலையில், தேர்தலில் பதிவான மொத்த வாக்குகளில் 90.69 சதவித வாக்குகளை கையிஸ் சையத் பெற்றுள்ளார்.



அதன்படி, துனீஷியா ஜனாதிபதித் தேர்தலில் அதிபராக கையிஸ் சையத் பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். இதையடுத்து, கையிஸ் சையத் இரண்டாவது முறையாக துனீஷியா நாட்டின் ஜனாதிபதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


சுல்தான்பூர்

# திருமணத்தில் அரங்கேறிய கொலை

திருமணத்தில் டி.ஜே. (DJ) பாடல் போடும் தகராறில் மாப்பிள்ளை பக்க விருந்தினர், பெண் வீடு சார்பாக வந்த விருந்தினரின் கழுத்தை அறுத்துக் கொலை செய்த சம்பவம் உத்தரப்பிரதேச மாநிலத்தில் அரங்கேறியுள்ளது.

அண்மைக் காலமாக திருமண நிகழ்வுககளில் டி.ஜே. பாடல்கள் ஏற்பாடு செய்து ஒவ்வொருவர் வரும்போதும் பாடல்களை ஒலிபரப்புவது அதிகரித்து வருகிறது.

அந்த வகையில், உத்தரப் பிரதேச மாநிலம் சுல்தானிபூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த திருமணத்தில், தான் மேடைக்கு வரும்போது, குறிப்பிட்ட பாடலை இசைக்க விட வேண்டும் என்று மணப்பெண் விரும்பிக் கேட்டுள்ளார்.



ஆனால், மாப்பிள்ளை தரப்பு தங்களுக்குப் பிடித்த பாடல்களையே ஒளிபரப்பியுள்ளது. இதனால் இரு வீட்டாருக்கும் வாக்குவாதம் எழுந்துள்ளது. கடைசியில் ஒரு வழியாக இரு தரப்பினரும் சமாதானமாகி திருமணமும் நடந்து முடிந்துள்ளது.

பின்னர் மாப்பிள்ளை வீடு சார்பில் திருமணத்துக்கு வந்த விருந்தினர் ஒருவர் ஆத்திரம் அடங்காமல் பெண் வீடு சார்பில் வந்த விருந்தினர் ஒருவரை இரவு 11 மணிக்கு வண்டியில் வீடு திரும்பும்போது வழிமறித்து கத்தியால் கழுத்தை அறுத்துள்ளார்.

படுகாயமடைந்த அவர், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். இவர் பெண்ணின் குடும்பத்திற்கு நெருங்கிய நண்பர் என்று கூறப்படுகிறது. இதற்கிடையே கழுத்தை அறுத்துவிட்டு தப்பி ஓடிய மாப்பிள்ளை பக்க உறவினரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கான்பூர்

# இளமை இதோ இதோ

உத்தரபிரதேசம் மாநிலம் கான்பூரில் உள்ள கிட்வாய் நகர் பகுதியில் ராஜீவ் துபே என்பவர் அவரது மனைவி ரேஷ்மி என்பவருடன் இணைந்து ‘மறுமலர்ச்சி உலகம்’ என்ற பெயரில் ஆக்சிஜன் தெரபி கிளினிக் ஒன்றை தொடங்கினார்.

இந்த தெரப்பி மையத்தில் தங்களிடம் பிரத்யேகமாக டைம் மெஷின் ஒன்று இருப்பதாகவும் அதில் சென்று வந்தால் குறுகிய காலத்தில் இளமைக்கு திரும்ப முடியும் என்றும் கூறி விளம்பரம் செய்துள்ளனர். 60 வயது நபர் கூட 25 வயது நபர் போல் மாறி விடுவார் எனவும் தெரிவித்துள்ளனர்.

அந்த மெஷினை இஸ்ரேலில் இருந்து இறக்குமதி செய்திருப்பதாக தெரிவித்த



நிலையில், அந்த கிளினிக்கிற்கு மக்கள் படை எடுக்க ஆரம்பித்துள்ளனர். மேலும் அங்கு வயதானவர்கள் பலர் குவிந்துள்ளனர். அவர்களிடம், “நீங்கள் காற்று மாசு காரணமாக வயதான தோற்றமடைகின்றீர்கள். இந்த டைம் மெஷின் மூலம் இளமையான தோற்றத்திற்கு சென்று விடலாம்” என்றும் ஆசை வார்த்தை கூறியுள்ளனர்.

ஆக்சிஜன் தெரப்பியில் வெற்றி பெற்றவர்கள் மட்டுமே டைம் மெஷினில் செல்ல தகுதி பெற்றவர்கள் என்றும் நிபந்தனை விதித்துள்ளனர். இந்த ஆக்சிஜன் தெரப்பியை 10 முறை செய்து கொள்ள 6 ஆயிரம் ரூபாயும், மூன்று ஆண்டுகள் செய்து கொள்ள 90 ஆயிரம் ரூபாயும் வசூலித்துள்ளனர். ஆனால் கடைசி வரை அந்த டைம் மெஷினை கண்ணில் காட்டவே இல்லை என பணம் கொடுத்தவர்கள் தெரிவித்துள்ளனர். குற்றம்சாட்டியுள்ளார்.

இதற்மைய, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவர்கள் ஏற்கெனவே வெளிநாட்டிற்குத் தப்பிச் சென்றுவிட்டதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# முன்னிலையில் இங்கிலாந்து இந்திய, பங்களாதேஷ்

அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியானது டெல்லியில் புதன்கிழமை (09) 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டிய பங்களாதேஷ் அனைத்து துறைகளிலும் பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

முதலாவது போட்டியில் ஓட்டங்களை வாரி வழங்கிய தஸ்கின் அஹ்மட்டை தன்ஸிம் ஹஸன் சகிப், இப்போட்டியில் பிரதியிடலாமென எதிர்பார்க்கப்படுவதோடு, முஸ்தபிசூர் ரஹ்மானுக்குப் பதிலாக மஹெடி ஹஸன் விளையாடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. தவிர மெஹிடி ஹஸன் மிராஸ் நான்காம், ஐந்தாமிடங்களில் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கத்தில் இந்திய அணியில் எதுவித மாற்றமும் இருக்காதெனக் கருதப்படுகிறது.



முதலாவது போட்டியில், ஓட்டங்களை வாரி வழங்கிய தஸ்கின் அஹ்மட்டை தன்ஸிம் ஹஸன் சகிப் இப்போட்டியில் பிரதியிடலாமென எதிர்பார்க்கப்படுவதோடு, முஸ்தபிசூர் ரஹ்மானுக்குப் பதிலாக மஹெடி ஹஸன் விளையாடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. தவிர மெஹிடி ஹஸன் மிராஸ் நான்காம், ஐந்தாமிடங்களில் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டிய பங்களாதேஷ் அனைத்து துறைகளிலும் பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

மறுபக்கத்தில் இந்திய அணியில் எதுவித மாற்றமும் இருக்காதெனக் கருதப்படுகிறது.

இன்று இரண்டாவது போட்டி:

# இந்தியாவுக்கு சவாலளிக்குமா பங்களாதேஷ்?



இந்திய, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியானது டெல்லியில் புதன்கிழமை (09) 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டிய பங்களாதேஷ் அனைத்து துறைகளிலும் பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

முதலாவது போட்டியில் ஓட்டங்களை வாரி வழங்கிய தஸ்கின் அஹ்மட்டை தன்ஸிம் ஹஸன் சகிப் இப்போட்டியில் பிரதியிடலாமென எதிர்பார்க்கப்படுவதோடு, முஸ்தபிசூர் ரஹ்மானுக்குப் பதிலாக மஹெடி ஹஸன் விளையாடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. தவிர மெஹிடி ஹஸன் மிராஸ் நான்காம், ஐந்தாமிடங்களில் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கத்தில் இந்திய அணியில் எதுவித மாற்றமும் இருக்காதெனக் கருதப்படுகிறது.



காயன்குடா அதிகஷ்ட பாடசாலை

# எல்லேயில் சாம்பியன்

வ.திவாகரன்

தேசிய ரீதியாக பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான எல்லேயில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட காயன்குடா கண்ணகி வித்தியாலயம் சம்பியனானது.

கண்ணகி வித்தியாலயமும் பல்வேறு வளப்பற்றாக்குறையுடன் காணப்படுகின்ற நிலையிலும் தேசியத்தில் சம்பியனாகியுள்ளமை எடுத்துக்காட்டத்தக்கதாகும்.



# தென்னாபிரிக்காவை வென்றது அயர்லாந்து

தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் திங்கட்கிழமை (07) நடைபெற்ற மூன்றாவது போட்டியில் அயர்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அயர்லாந்து

அயர்லாந்து: 284/9 (50 ஓவ.) (துடுப்பாட்டம்: போல் ஸ்டேர்லிங் 88 (92), ஹரி டெக்டர் 60 (48), அன்டி போல்பிரயன் 45 (73), கேர்ட்டிஸ் கம்பர் 34 (36), லொர்கான் டக்கர் 26 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: லிஸார்ட் வில்லியம்ஸ் 4/56, ஒட்னெய்ல் பார்ட்மன் 2/32, அன்டிலி பெக்லுவாயோ 2/32)

தென்னாபிரிக்கா: 215/10 (46.1 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜேஸன் ஸ்மித் 91 (93), கைல் வெரைன் 38 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிரஹாம் ஹூமெ 3/29, கிறேய்க் யங் 3/40, மார்க் அடைர் 2/54, மத்தியூ ஹம்பிறேய்ஸ் 1/16, பியொன் ஹான்ட் 1/44)

போட்டியின் நாயகன்: போல் ஸ்டேர்லிங்

தொடரின் நாயகன்: லிஸார்ட் வில்லியம்ஸ்

இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்ற தென்னாபிரிக்கா, 2-1 என தொடரைக் கைப்பற்றியது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 09 ஒக்டோபர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.